உ

கடவுள் துணை.

## ஸ்ரீகிருஷ்ணலீலை யென்னும்

# நாரதர்பங்கநாடகம்.

இஃது

கொஞ்சி குப்பம்

துரைசாமி சமஸ்டியார்

மாணாக்கரி லொருவராகிய

நாராயணசாமி படையாச்சியார்

குமாரன்

## கோவிந்தசாமிபடையாச்சியாரால்

இயற்றியது.



ஷை யாரிடம் சகல சுதந்தரமும் பெற்றுக்கொண்டு

மயிலை

தி. முருகேச முதலியாரால்

சென்னை

வாணீ விலாசம் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

---

ரிஜிஸ்டர் காபிரைட்.

இதன் விலை] 1926. அணா 6.

# ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகலருக்குந் தெரிவிப்பது யாதெனில்;— 1867-வது வருஷத்திய 25-வது ஆக்டு 20-வது பிரிவு 6-வது விதியின்பிரகாரம் இந்நூலை காப்பிரைட்ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கின்றது ஆகையால் இந்நூலுக்குஉடையவராகிய ம. தி. முருகேச முதலியார் அவர்களின் உத்தரவின்றிபிறர் இதைப்பதிப்பித்தாலும் இதைவேறுபாஷையில் எழுதி பெயர்த்தாலும் இதிற் கண்டிருக்கிற விஷயங்களை அச்சிடுதலுங்கூடாது. அப்படிஅச்சிட்டால் அதனாலுண்டாகும் நஷ்டத்தை வசூல் செய்யப்படும்.

எமது விலாசம்;—

மயிலை .தி. முருகேச முதலியார்

புக்ஷாப் ஓல்டவுன் கடலூர்.

உ

கடவுள் துணை.

# ஸ்ரீ கிருஷ்ணலீலை யென்னும்

# நாரதர் பங்கநாடகம்.



## கணேசர் துதி விருத்தம்.

சத்தியருள்பாலனே கணேசமூர்த்தி
சந்ததமும்கிருஷ்ணன்செய்யும் லீலையென்னும்
உத்தமஞ்சேர்நாடகத்தி நாரதர்பங்கந்தன்னை
உரைத்திடவேதாளராக சங்கீதங்கள்
சித்தமாய்பொருந்திடவே துணைசெய்வாயே
சிந்தித்தோமெல்லோரும் உன்பாதத்தை
அத்தனருள்பரமசிவன் பெற்றபாலா
ஐயனேதிருவடியை வணங்குவோமே.

## சுப்பிரமணியர் துதி விருத்தம்.

சீதாய்வீணைதனைக் கையிலேந்தி
சிறப்புடனேசங்கீதம் பாடும்நல்லி
நாரதனைகிருஷ்ணன்செய்த பங்கமென்னும்
நாடகத்தையன்பாக எழுதுதற்கு

தாரணியோர்வானோர்கள்சித்தரெல்லாம்
தரிசனஞ்செய்தென்னாளும் பூஜைசெய்யும்
சூரசம்மாரஞ்செய் தலைக்கார்க்கும்
சுப்பிரமணியர்திருப்பாதம் போற்றினேனே:

## பரமசிவன் துதி விருத்தம்.

அன்புடனே பக்தர்களெல்லாம்போற்றும்
ஆதியே பரமசிவா னந்தசோதி
நன்மையுடன் நாரதன் பங்கமென்னும்
நாடகத்தை நலமுடனே யெழுதுதற்கு
வண்மையுடன் சங்கீத தாளராகம்
வகையுடனே இலக்கணமு மமைந்திருக்க
இன்மையா னந்தனே கௌரிநாதா
சிவனேயுன் திருவடியை துதித்திட்டேனே.

## பார்வதி துதி விருத்தம்.

உம்பர்களெல்லாம் பணிந்து துதித்துபோற்றும்
உமையவளே பார்வதியே கௌரிசத்தி
கம்பமத யானைமுக மாய்விளங்கும்
கணபதியைப் பெற்றெடுத்த ஜோதிபாதம்
நம்பினேன் நாரதர் பங்கமென்னும்
நாடகத்தை யானெழுதி நடத்துதற்கு
அம்பிகையே திரிசூலி நீயுந்தன்
அருள்புரிவா யுன்பாதம் போற்றினேனே.

## சரஸ்வதி துதி விருத்தம்.

திருவளரு மமிர்தகுண ஞானனந்த
சிங்காரி திருக்கரத்தில் வீணையேந்தி
பெருமையாய் சங்கீதம் மகிழ்ந்துபாடும்
புகழிலகு ஞானகல் யாணிவாணி
ஸ்ரீகிருஷ்ணலீலை நாரதர் பங்கமென்னும்
கீர்த்திசேர் நாடகத்தை யெழுதுதற்கு
இத்தருணமே துணைவந்து காருமம்மா
சரஸ்வதியே துணையென்று துதித்திட்டேனே.



## கிருஷ்ணபகவான் வருகிற விருத்தம்.

அன்புடனே கோபியர்வீட்டிற்சென்று
அவரவர்கள் தலைமயிரை முடிந்துவிட்டு
வண்மையாய் பாம்புகளை நடுவில்விட்டு
வல்லமையாய் கைதட்டி சிரிக்கும்போது
என்னசெய்வோமென்றவர்க ளிழுத்துக்கொண்டு
எல்லோரும் கீழ்விழுந்து துடிக்கும்போது
நன்மையாய் பால்தயிர்மோர் வெண்ணெயெல்லாம்
நன்றாய்க் குடிக்கிறகிருஷ்ண னிதோவருகின்றாரே.

வசனம்.

அகோ தெப்படி யென்றால் ஆயர் பாடியில் இடையர்களும் கோபியர்களும் படுத்து நித்திரைசெய்யும்போது கிருஷ்ணமூர்த்தி யானவர் புருஷன்குடுமியையும்பெண்சாதிகள்தலையும் முடிபோட்டு விட்டு பாம்புகளைமத்தியில் விட்டு கைதட்டி சிரித்திடவும் பாம்புகள்

புஸ்ஸெனச்சீறி வருவதைக்கண்ட கோபியர்களும் இடையர்களும் எழுந்தோட குடுமி கூந்தலின் முடியால் ஓடமுடியாமல் ஒருவர் மீதொருவர் விழுந்து தத்தளிக்கும்போது கிருஷ்ணன் தட தட வென்று உரியின்மீதேறி தயிர் வெண்ணை பால் மோர் குடவையை யெடுத்து மள மளவென்று குடித்துவிட்டு அந்தக்குடவைகளை அவ ரவர்கள் முன்னால் போட்டுடைத்து வேடிக்கையான லீலை செய்ய வருகிற விதங்காண்பீர்களையா சபையோர்களே.

## கிருஷ்ணன் வருகிற தரு.

கிருஷ்ணமூர்த்தி வந்தாரே கோபால
கிருஷ்ணமூர்த்தி வந்தாரே

(சருள்) கோபியர் அலரி    துதித்திட
வருகிறார் கிருஷ்ணன்    பெருமையாகவே
கோபியர்வீட்டில்    தயிர்வெண்ணை பால் திருடி
தருந்தபடியேயுண்டு    மகிழ்ந்துகொண்டாட்டமாய்

(சருள்) தலையில்கிரீடமும்    வாகுவலையமும்
தாங்கிவேகமாய்    ஓங்கும்வீரமாய்
சடுக்கெனவீட்டில்    நுழைந்துபால்தயிர்
சந்தோஷமாய்க்    குடித்து

(சருள்) படுக்கைவீட்டினில்சென்று    பாம்பைநடுவில்விட்டு
குடுகுடென்றோடுவார்    கோபியர்பிரளவே (கிரு)

சதிபதிதலைமயிரை    ஒன்றாய்முடிந்து
சர்ப்பங்களை    விடுப்பார்

(சருள்) அதிரவேகோபியர்    அலரிதுதித்தோடி
ஆஹா ஹா வென்றவர்    கைகொட்டிசிரித்திட (கிரு)

மங்கைதயிலேபுகுந்து    பசுக்கூட்டத்தை
மடக்கித்    துரத்திவிட்டு

(சருள்) சந்தடிசெய்யாமல்    சகலரும்திடுக்கிட
சிரித்துக்கொண்டோடினால்    கோபியர்மரித்திட (கிரு)

ஓடியொளித்திடவே கோபியர்
ஓகோ கோ வென்றலறி

(சருள்) தேடிப்பிடித்திடுவோம் திருட்டுக்கிருஷ்ணனை
வாடியென்றெல்லோரும் மிரண்டோடசெய்திட (இரு)

## பொது விருத்தம்.

இவ்விதமாய் கிருஷ்ணன்செய்யும் லீலையெல்லாம்
இடையருடன் கோபிகளும் மனமிரண்டு
எவ்விதமாய் ஆயர்பாடியில் பிழைப்போம்
என்றலறி கோபியர்கள் மனம்திகைத்து
ஒவ்வியே சகலருமே கூட்டங்கூடி
ஒருமனதாய் நந்தகோ பனுக்குரைக்க
ஒளிவிய மில்லாமலே அரண்மனைக்கு
அனைவரு மொன்றாய்க்கூடி வருகின்றாரே.

### வசனம்.

அகோ கேளுங்களையா சபையோர்களே கிருஷ்ணமூர்த்தியா னவர் தினந்தோரும் இடையர்வீட்டில் நுழைந்து புருஷன் மனவியர் படுத்துறங்கும்போது நித்திரை செயயும் சமையத்தில் பெண் சாதியின் கூந்தலையும் புருஷன் குடுமையும் ஒன்றாய்சேர்த்து முடிந்துவிட்டு அவர்கள் மத்தியில் பாம்புகளைவிட்டு கையைத்தட்டி சிரிக்கவும் பாம்புகள் புஸ்ஸென்று சீறிக்கொண்டு வரவும் இடையர்களும் கோபியர்களும் எழுந்தோடும்போது பார்த்துக்கண்டு ஒருவரையொருவர் இழுத்துக்கொண்டு ஓடமுடியாமல் ஒருவர்மேல் ஒருவர்விழுந்து தத்தளிக்கும் சமயத்தில் கிருஷ்ணமூர்த்தி உரியின் மீதேறி தயிர் வெண்ணை பால் மோர் முதலானவையெல்லாம் குடுவையுடனேயெடுத்து குடித்துவிட்டு ஓடுவது கோபியர்கள் தலைமயிர்முடியை அவிழ்த்துக்கொண்டு பிடிக்கப்போனால் கிருஷ்ணன் அகப்படாமல் ஓடிஓடி சிரிப்பதும் தனக்குரிய விளையாட்டா இருப்பதனால் கோபியர்களெல்லாம் கூட்டங்கூடி நந்தகோபனுக்குச் சொல்லுவோமென்று அரண்மனைக்கு வருகிறவிதங்காண்பீர்களையா சபையோர்களே.

## கட்டியக்காரன் விருத்தம்.

அன்புடனுலகோர்மெச்சும் அதிவீரநந்தகோபன்
பொன்பணிமகுடம்பூண்டு போர்மன்னரஞ்சத்தக்க
வண்மைசேர்வாள்வில்லேந்தி வருகிறார்சபைக்கிப்போது
தன்மையாய்சபையுள்ளோரே தரிசித்துவணங்குவீரே.

வசனம்.

அதோ கேளுங்களையா சபையோர்களே சாமபேத தான தண்டமெனும் சதுர்விதஉபாயங்களினால் தரணியைப்பரிபாலனஞ் செய்யும் துவாரகைதேசத்தின் அரசனாகிய நந்தகோபமகாராஜா கொலுவுக்கு வருகிறார் சபையோர்கள் சந்தடிசெய்யாமல் அவரவர் ஸ்தானத்தில் அமர்ந்து ஆனந்தமாய் இராஜதரிசனங்கண்டு நமஸ்காரஞ்செய்து வணங்கி அவரவர் மனக்குறையைப்புகன்று வேண்டிய சகாயத்தை பெறுவீர்கள் சபையோர்களே.

## நந்தகோபன் வருகிற கவி.

பாடியிலரசனான பண்புசேர்நந்தகோபன்
ஈடில்லாபதக்கமின்ன இந்நற்சபையோர்மெச்ச
கூடியேமாதரோடு குண்டலம்செவியிலாட
நாடியேநந்தகோபன் நகர்கொலுவருகின்றாரே.

## நந்தகோபன் தரு.

| | |
|---|---|
| ஆயர்பாடிக்குராஜன் | யாதவகுலநேசன் |
| அரசன்நந்தகோபனும்வந்தான் | கொலுசம்பரமாக |
| அரசன்நந்தகோபனும் | நானே |
| நேயமாய்பசவானை | நிதமும்மறவாசீலன் |
| மாயனைவளர்த்துவந்த | மகிபதியானலோலன் |
| (சுருள்) மங்களம்தினமும் | மறையவர்பாட |
| பொங்கமாய்பேரிகை | எங்குமேபோட |
| காலைக்கதிரோன்போலே | கவசகுண்டலமாட |
| வாலைப்பருவமுள்ள | வஞ்சியர்இருபால்சூழ |

(சுருள்) வாடையும்பரிமள வாசனைவீச
காடிடும்யாதவர் கற்புகழ்பேச (ஆயர்)

கோபாலமாதரிட குறிப்பைதினமறிய
ஆவுதனைவளர்க்கும் அருமைதனைத்தெரிவேன்

(சுருள்) ஆரமாலைகள் அங்கத்திலாட
மாரனென்றுமே மாதர்கொண்டாட (ஆயர்)

பட்டநாமம்துலங்க பதக்கம்மார்பிலிலங்க
கனவயிரமிழைத்த கதிர்முடியும்விளங்க

(சுருள்) காமதில்பவுத்திர மோதிரமின்ன
சங்கீதவாத்தியம் சகலமும்பன்ன (ஆயர்)

## நந்தகோபன் கவி.

கஞ்சனுர்சிரத்னதக்கொய்து கபாலமும்வெந்துமாயன்
பஞ்சமாயெனதுசெங்கோல் பாடியில்என்றும்வாழ்க
மிஞ்சியகாரங்குவித்தேன் மேன்மையாய்உன்னையாளும்
அஞ்சனசெய்துநின்றேன் அடியினையாளும்கோமா.

வசனம்.

வாரும் எனது மந்திரிமார்களே நாம்கொலுவைகாடிவந்து எனதுசெங்கோல் நீடூழிவாழும்படி சாக்ஷாத்பராபரப் பொருளாகிய பரமாத்மாவை வணங்கிவிட்டபடியால் சற்று தேசவிசாரணை புரிய எண்ணங்கொண்டேன் மந்திரிமார்களே.



## நந்தகோபன் தேசவிசாரணை தரு.

ஆலயங்களிலே ஆறுகாலம்பூஜை
அன்பாய்நடக்கின்றதா ஆ ஆ மந்திரி

### மந்திரி தரு.

காலைமாலைகள் ஆக்கினைப்படியே
கடினமாய்செய்கின்றாரே ஏ ஏ அரசே

### நந்தகோபன் தரு.

வேதியர்செய்யும் யாகாதிகோஷ்டங்கள்
விதம்போல்நடக்கின்றதா ஆ ஆ மந்திரி

### மந்திரி தரு.

நீதிமுறைப்படி ஆலயந்தனிலே
நிதம்நிதம்நடக்கின்றதே ஏ ஏ அரசே

### நந்தகோபன் தரு.

பரமனருளினால் மாதமும்மாரி
களிப்பாய்பெய்கின்றதா ஆ ஆ மந்திரி

### மந்திரி தரு.

அரசனேகமது ஆயர்பாடியில்மழைகள்
அன்புடனேபொழிகின்றதே ஏ ஏ அரசே

### நந்தகோபன் தரு

ஆயர்பாடியிலுள்ள யாதவர்யாவரும்
அன்புடன்க்ஷேமந்தானா ஆ ஆ மந்திரி

### மந்திரி தரு.

மாயனைவளர்க்கும் மகிபதியேஎந்தன்
மகிழ்ச்சியாய்க்ஷேமந்தானே ஏ ஏ அரசே

### நந்தகோபன் தரு.

முல்லைகுலத்தவர் வழக்கத்தின்படியே
முகுந்தனை துதிக்கின்றாரா ஆ ஆ மந்திரி

## மந்திரி தரு.

அல்லலில்லாமலே யாதவர்யாவரும்
அன்புடன் துதிக்கின்றாரே ஏ ஏ அரசே

## நந்தகோபன் வசனம்.

ஆனால் கேளும் மந்திரியாகிய உப[illegible] நமது பட்டணத்தி லுள்ள குடிபடைகள்யாவரும் குறைவில்லாமல்இருக்க[illegible]ால் மகாசந்துருஷ்டி யடைந்தேன் உபநந்தனே.



## கோபாலமாதர் கவி.

எல்லையளந்தோன்றனை எந்நிழையறிந்துநாங்கள்
நல்லதுஎன்றுமாதர் நந்தனைக்காணவேண்டி
முல்லைதன்குலத்தோரெங்கள் முகுந்தனைவெறுத்துப்பேச
அல்லலைத்துலைப்போமென்று அனைவரும்வருகின்றாரே.

## பொது வசனம்.

நந்தகோபன் கொலுசிம்மாதனத்தில் வீற்றிருக்கும்போது பன்னீராயிரம் கோபிகாஸ்திரிகளும் நந்தகோபனைக்காணும்படிக்கு வருகிறவிதங்காண்க.

## கோபாலமாதர் தரு.

கோபாலமாதர் வந்தார் குயிலன்னம்போல
கோபாலமாதர் வந்தார்

இயாபகம்வேருகி — கன்னியரானவர்கூடி
(சுருள்) கங்குல்போலே — கம்மலும்சூடி
நங்கைமா— —ரும — கந்தனைத்தேடி (கோபால)

கட்டுங்கலை துலங்கவே — மாதர்கள்மீது
கனத்தமணி — குலுங்கவே
பொட்டுபரிமளிக்க — பூவையர்மஞ்சளும்பூசி
திருடன்கிருஷ்ணன் தன்னை — தெரிவையர்கள்பேசி
(சுருள்) திருட்டுக்கண்ணனும் — செய்திடும்சூதை
மிறட்டியனைவரும் — பேசலாம்வார்த்தை (கோபால)

கன்னியரெல்லாங்கூடினர் — அரசன்தன்னை
காணவேவந்து — நாடினர்
அன்னையசோதையாள் — அரசனிடமேசென்று
சின்னகிருஷ்ணன்சேதியை — தெரிவிக்கவேண்டுமென்று
(சுருள்) சின்னயிடையுடன் — பின்னலும்துன்ன
கன்னியர்கழுத்தினில் — பொன்மணிதுன்ன (கோபால)

## வேறு தரு.

நாதன்சபைநாடிச்செல்வோம் — நங்கையேவாராய்மானே
ஏதுமரியாதமாது — ஏந்திழைவாராய்தேனே
கண்ணன்செய்தகொடுமையெல்லாம் — கண்டுசொல்லுவோம்
போகலாமிவ்வூரைவிட்டு — பொற்கொடியாளேமாதே
உரியிலுள்ள தயிரையெல்லாம் — உருட்டிவிட்டான்தேனே

## கோபிகள் கவி.

என்னடி தங்கைமாரே இரவினில்வந்துகண்ணன்
பன்னிடும்தயிர்பால்வெண்ணை பதஷ்டமாய்உண்டதெல்லாம்
கன்னியேஉள்நுழைந்து கணவன்போல்ஸ்தனம்பிடித்து
அன்னீதம்செய்துசேலை அவிழ்த்ததைஉரைசெய்வோமே.



## கோபிகள் ஜம்பை தரு.

அரசன்உன்பாதமதில் அரிவையர்களும்அபயமையா
தருமகுணமன்னவனே தையலாரும்என்னசெய்வோம்

## நந்தகோபன் ஜம்பை தரு.

அபயமீயுமிட்டதென்ன அரிவையரேகூவிமேவி
விபரமாய்தெரியச்சொல்வாய் விளம்பிடுவீர்யானறிய

## கோபிகள் தரு.

பாலுதயிர்வெண்ணெய்நெய்யும் பதமாககாய்ச்சிவைக்க
நாலுநாளாய்உருட்டிவிட்டால் நங்கையாருமென்னசெய்வோம்

## நந்தகோபன் தரு.

பாலுவைத்தோம்காணோமென்றீர் பகருமொழிகேளுமம்மா
மாலினிடகிருபையுண்டு மாதேநமக்குறைவேது

## கோபிகள் தரு.

இரவுதனில்வந்துதினம் எங்களிடவளவிலேறி
குறைவுபடசெய்ததெல்லாம கோதையர்கள்எதுரைப்போம்

## நந்தகோபன் தரு.

உறங்கும்வேளைதனைப்பார்த்து உங்களிடமனைப்புகுந்து
குறைநீவதுஉங்களையும் குற்றமதுசெய்திட்டான்

### கோபிகள் தரு.

மைந்தனும்என்கலையவிழ்த்து மானபங்கஞ்செய்தானையோ
இந்தவூரைவிட்டுபோனாலும் எங்கேயாகிலும்செல்வோம்

### நந்தகோபன் தரு.

எந்தன்குதனதினால் என்னிடத்தில்இயம்பவந்தீர்
உந்தன்மகன்மெய்தால் உடனேஉயிர்விடுவீர்களே

### கோபிகள் தரு.

பங்கம்செய்துஎங்களையும் பாடிமகன்ஆளட்டுமே
எங்களுக்குவிடைதாரும் ஏகிடுவோம்நாங்களுமே

### நந்தகோபன் தரு.

உங்களிடபாலனைப்போல் உள்ளமதுதான்களித்து
எங்களிடநகரைவிட்டு ஏகிடவுமாகாதிப்போ

### கோபிகள் தரு.

அண்ணலேஉன்பாதமதில் அரிவைவந்தனம்
இந்ததெரிவை வந்தனம்
புண்ணாகினோம்ஊரைவிட்டுப் போறோமையனே

### நந்தகோபன் தரு.

நீடூழியாய்வாழ்ந்திடுவீர் நேர்த்தியாகவே
வெகுகீர்த்தி யாகவே
வீடுவிட்டுவெந்தவிதம் விள்ளுவீர்களே

### கோபிகள் தரு.

உன்மகனால்வீட்டிலொரு பசுவும்வல்லையே.
அங்கேஆடும் வல்லையே
கன்னிரான்கலபால்வைத்தேன் காணோமையனே

### நந்தகோபன் தரு.

காணுமென்றுசொல்லும்விதம் கன்னிமார்களே
எந்தன்முன்னில் பண்ணுவீர்களே
வேணுநாதன்உன்னைக்கண்டு வேலைஎன்செய்தான்

## கோபிகள் தரு.

உரியறுத்துகுடுவையெல்லாம் உடைத்துவிட்டானே
என்னைக்கெடுத்து விட்டானே
விரியன்பாம்புதேளைவிட்டு போடியென்றானே

## நந்தகோபன் தரு.

உரிக்கெட்டாச்சிறுவனுச்சே உகந்துபாருமே
நீயும்பகர்ந்து கூறுமே
அரியாதபிள்ளைமேல்பழி அகலபோகுமோ

## கோபிகள் தரு.

அளைந்ததெல்லாம்ஆகாதென்றீர் அரசனேகேளும்
எங்கள் அரசனேகேளும்
உரைப்பதென்னஎங்களிடம் உள்ளம்நோகவே

## நந்தகோபன் தரு.

வேகுதென்றஎன்னிடத்தில் விள்ளவந்தாயே
சொல்லிக்கொள்ள வந்தாயே
தோகையேமைந்தன்மேல் குற்றம்கூறவேண்டாமே

## கோபிகள் தரு.

மாரைப்பிடித்திழுத்து சேருமென்றானே
வார்த்தை கூறுமென்றானே
மாலையிட்டமன்னவன்போல் மருவவந்தானே

## நந்தகோபன் தரு.

நாணம்போச்சுஎன்றுரைக்கும் நங்கைமார்களே
எந்தன்தங்கை மார்களே
ஆணையிடும்பிள்ளைமீதில் அச்சமில்லாமல்

## கோபிகள் தரு.

பாருமெங்கள்ஆடையெல்லாம் பங்கம்போச்சுதே
நாங்கள்மங்க லாச்சுதே
மாருருவுசெய்ததினால் மானம்போச்சுதே

## நந்தகோபன் தரு.

கேலியாகபேசவந்தீர்
நீங்கள்
வாலிபமோகந்தன்பிள்ளை

பாடிமாதரே
நாடிசாதனை
வஞ்சம்வேண்டாமே

## கோபிகள் கவி.

இன்னமும்என்னசொல்வோம் எங்களைசெய்தபங்கம்
கன்னியர்உறக்குப்போது காணாமல்இரவில்வந்து
என்னிடகணவனைவிட்டு இனியொருபுருஷனோடு
அன்னவன்செய்யும்சூதால் அவமானமாச்சுதையோ

## வசனம்,

கேளும் மகாராஜனே நாங்கள் நித்திரையி லிருக்கும்போது என்னுடைய கணவனைவிட்டு அடுத்தவீட்டு புருஷனோடு கொண்டு போய்கிடத்திவிட்டு போனதினால் எங்களுக்கு பங்கமாயிருக்கிறது மகாராஜனே.

## கோபிகள் தரு - வேறு.

முல்லைநிலந்தனி
இராஜனே
செல்விபருகாங்கள்
போசனே

உதித்திடும்பாலனே
இராஜனே
என்னதான்செய்குவோம்
போசனே

## நந்தகோபன் தரு.

கோள்களைச்சொல்லியே
பூவையே
பால்மணமாறாத
பாவையே

கோவுகள்மேய்த்திடும்
பூவையே
பாலகனைச்சுதே
பாவையே

## கோபிகள் தரு.

பாலனுச்சேயென்று
மன்னவா
காலம்போச்சுதென்று
நாதனே

பாலனைபெருக்குறீர்
மன்னவா
கன்னியைவெறுக்குறீர்
நாதனே

## நந்தகோபன் தரு.

என்தன் மனைவிட்டு பெண்களா
எங்கும்போறதில்லை பெண்களா
மைந்தனால்உங்கள் கண்களா
மானம்போகுதென்றீர் கண்களா

## கோபிகள் தரு.

மனைவிட்டுவல்லையென்று பேசுறீர்
மறைவாகசற்று பேசுறீர்
தனையன் செய்தவேலை வீசுறீர்
தாளவசமில்லையே வீசுறீர்

## நந்தகோபன் தரு.

உரியையறுத்துமே மாதரே
உடைத்திட்டகுடுவைகள் மாதரே
திறவானோஎன்பிள்ளை மாதரே
சேயிழையேசொல்லும் மாதரே

## கோபிகள் தரு.

அறவன்தேனையெல்லாம் ராஜனே
ஆடைக்குள்விடலாமோ ராஜனே
புருஷன் தவறவேறே மெய்யிது
புருஷனைச்சேர்த்தானே மெய்யிது

## நந்தகோபன் தரு.

இருட்டிலேவந்துமே கோதையே
யீனம்செய்தானென்றீர் கோதையே
மொழியாதவார்த்தையை வாதையாய்
முருர்தன்மேல்போடுதீர் வாதையாய்

## கோபிகள் தரு.

பருவமில்லையே மெய்யிது
பாராளும்வேந்தனே மெய்யிது
குருவிடைதன்னிலே மெய்யிது
கன்றுபோலாடுறான் மெய்யிது

## நந்தகோபன் தரு

திருட்டுத்தனமாக
தெரிவையே
கிருஷ்ணன் தானோ
அரிவையே

தேனை விட்டானென்றீர்
தெரிவையே
இன்னம் கள்ளர்களுண்டோ சொல்
அரிவையே

## கோபிகள் தரு.

திருடனாயிருந்தால்
யாதவா
சிறுவன் செய்தவேலை
போதவா

திரிகள் கொளுத்துவானோ
யாதவா
சின்னங்களாச்சுதே
போதவா

## நந்தகோபன் தரு.

பருவக்காலம் வந்தால்
பொங்குமீர்
ஏதுமரியாத
மங்கையே

பால்வெண்ணை நின்பானே
பொங்குதீர்
பாலகனாச்சுதே
மங்கையே

## கோபிகள் கவி.

விணுக்கு அவனையின்றீர் வெட்கமுமில்லாப்பிள்ளை
சாணவேயில்லை இந்த கடல்சூழ்ந்த உலகந்தன்னில்
ஆணவத்தாலே வந்த அரியவன் செய்யும் வேலை
நாணமும்போச்சுதையோ நங்கைநானென்னசெய்வேன்.

## கோபிகள் வசனம்.

கேளுமையா மகாராஜனே இந்தப்பிள்ளையைப்போல் எங்கும் கண்டதில்லை இப்பேர்ப்பட்ட துன்மார்க்கமான பிள்ளையை எங்கும் கண்டதில்லை ஆகையால் நாங்கள் இந்தவூரைவிட்டு எங்கேயாகிலும் சென்றுவிடுகிறோம் மகாராஜனே.

## நந்தகோபன் கவி.

இந்ததேரர் ஆயர்பாடி இருந்திடும்மாதே கேளும்
பந்தமாயுரைத்ததெல்லாம் பலனிதம் தெரிந்தேன் இன்னும்
வந்தடி தெரியாவண்ணம் வஞ்சியே மனைக்குச்சென்று
அந்தமாய் எந்தன்தேவி அசோதையை அழைத்துவாரீர்.

## நந்தகோபன் வசனம்.

ஆனால் கேளும்மந்திரிமார்களேஎனதுதேவியாகிய அசோதை யை அதிசீக்கிரம் அழைத்துவாருங்கள் மந்திரிமார்களே.



## அசோதைவருகிற கவி:

அதிபெரும்மயிலைப்போலும் தோகையாள்கலைகள்பூண்டு
மதிமுகமுடையமாது மார்பினில்பணிகளாட
பதிபுகழ்நந்தகோபன் பாரியாள்அசோதையாளும்
அதிவிதசபையைநாடி. அரசனைக்காணவாராள்

## அசோதை வசனம்

அகோஎப்படியென்றால் அசோதையம்மாள் ஆடைஆபரண அலங்காரசிங்காரமாய் நவரத்ன ஆபரணங்கள்பூண்டு பட்டுவஸ்திரம் உடுத்திக்கொண்டு அன்னம்போல் நடந்து குயிலைப்பழிக்கும் இனி மையான சுநலொலிசப்திக்க அதிக சிங்காரமாய்தனது பிராணபதி யாகிய நந்தகோபனைக் காண்பதற்காக அரண்மனையை நாடிவருகிற விதங்காண்பீர்கள்சபையோர்களே.

## அசோதை தரு

திங்களையணிந்தயீசர் திருவடியதனைப்போற்றி
இங்கிதமானஅசோதை இச்சபைநாடிவாரேன்

பங்கயவதனமுள்ள பாவையர்க்கரசியான
வங்கியும்கரத்திலாட வனிதையும்வாரேன்
நெத்தியில்திலர்தமின்ன நீலவர்ணப்பொட்டுமிட்டு
புத்தியில்சிறந்தவல்லி பூவையர்வாரேன்
பத்தியாய்சிமிக்கிநத்து பகலவனுதையம்போல
நத்தியேசபைமுன்னிலே நங்கையும்வாராள்
கண்டவர்கலங்கிடவே கண்டாமணிசொலிக்க
மண்டலமபுகழும்ரூபி மாதுமேவாரேன்
குயிலும்மயங்கிவாடும் கோதையாள்இவள்மொழிக்கு
மயிலைப்போல்நிறவதனி மங்கையும்வாரேன்
கன்னியர்மலர்கள்சூடி கரமதில்வளையலாட
சென்னியில்பிரைகளிட்டு சேயிழைவாரேன்
நடையும்அன்னத்தைப்போல நல்லமுத்துகோர்வையாட
இடையில்ஒட்டியாணமிட்டு எந்திழைவாரேன்

## அசோதை சருணை தரு

நாதாஎந்தன்நாயகரே நங்கைநானுமே
பாதமேபணிந்துநின்றேன் பாதுகாருமே

## நந்தகோபன் தரு.

மாதேஎன்றும்வாழ்ந்திடுவாய் மனதைப்போலவே
தோதாகவேமங்கிலியம் சுகமாகவாழ்வாய்

## அசோதை தரு வேறு

இந்தப்பெரியோர்கள் சபைதன்னில்
எந்திழைதன்னை யழைத்ததென்ன

## நந்தகோபன் தரு.

அந்தவிதம்செப்பிடு வேன்கேளும்
அரிவையரேஎந்தன் தெரிவையரே

## அசோதை தரு.

சுந்திரனேஇந்த சபையிலே
தோகையிருளதிட கூருமையா

## நந்தகோபன் தரு.

குக்தாங்களில் லாமலேயும்
கூறும்வசனத்தை கேளுமடி.

## அசோதை தரு.

பேரானகாரியமோ அதை
பேதையரிங்கு கூறுமையா

## நந்தகோபன் தரு.

ஆரூத்தியா மெல்லாமிப்போ
ஆருடன்சொல்லி நூலைத்திடுவேன்

## அசோதை தரு.

என்னுவிதம் நாணகியஇப்போ
இன்பமானவார்த்தை ஓதிடுவீர்

## நந்தகோபன் தரு.

பண்ணிடுவேன் கேளுமிப்போயீயும்
பாவையரேஎந்தன் ரத்தினமே

## அசோதை கவி.

ஈசரைப்போல்பாடிதன்னை இயல்புடனேஆண்டுவரும்
நேசனேஇச்சபையில் நேரிழையைவரவழைத்த
பாசமானசேதியது பாவையரும்தானரிய
ஆசையுடன்செப்பிடுவீர் அரிவையரும்தானரிய

## அசோதை வசனம்.

வந்தனம் வந்தனம் பிராணேசா இப்பேர்க்கொற்ற சபையில் அடியாளைவரவழைத்த சங்கதியை தெரியச்சொல்லும் பிராணேசா.

## நந்தகோபன் கவி

அரிவையரேயென்பாதம் ஆசையுடன்பணிந்ததாலே
கருமமெல்லாமதான்போக கன்னியரேவாழ்ந்திடுவாய்
உருக்கமுடன்இச்சபையில் உந்தனையே அழைக்கவிதம்
பெருமையுடன்நானுரைப்பேன் பேதையரேகேளுமிப்போ

சேரும் பெண்ணே எனது பிராணநாயகி இச்சபையைகாடி உன்னைநான் அழைத்தவிதம் இன்னதென்று சொல்லிவருகிறேன் கேட்டுவாடி பெண்ணே பிராணநாயகி.

## அசோதை தரு.

ஆசைக்கிசைந்த எந்தன்காதா
அரிவையை அழைத்த விதம்ஏதும்

## நந்தகோபன் தரு.

அழைத்தவிபரம் சொல்வேன்பெண்ணே
அன்புடன் கேட்டிடுவாய்கண்ணே

## அசோதை தரு

எந்தனையழைத்த வார்த்தையேது
ஏந்திழைதெரிந்திட இப்போவோது

## நந்தகோபன் தரு

கோபாலமாத ரெல்லாங்கூடி
குழந்தைமேல்பழி சொன்னாரேடி

## அசோதை தரு

பாவையர்கூடி வந்துசொன்ன
பரிவானவார்த்தையது என்ன

## நந்தகோபன் தரு

ஆயர்தன்மாதர்களும் வந்தார்
அருமைபாலகனை நொந்தார்

## அசோதை கவி

நாதாநீபொப்பலாமோ நலமான ஆயர்பாடி
மாதர்கள்செப்பும்வார்த்தை மைந்தன்மேல்கொடுமையாகும்
தீதுதான்என்றுஎண்ணி தெரியாமல்செவியில்கேட்டு
பதமாகசொல்லவந்தீர் பாதகம்நாம்ஒப்பலாமோ.

## அசோதை வசனம்

கேளும்என தபிராணநாதா ஆயர்பாடியிலுள்ளயாதவப்பெண்கள்எல்லாம் தினந்தோறும்சொல்கிறவழக்கப்படிசொன்னால்அதை மெய்யென்றுநம்பிபிள்ளையை காட்டில் அனுப்புவது சரியல்லபிராணநாதா

## அசோதை தரு

நீதனேஉன்னிடமின்மலர் தாளினை
போதனேபணிந்தேன் சிறுபாலனுச்சுதே

## நந்தகோபன் தரு.

பாலகனென்றாலோ பாவையர்களிடத்தில்
செய்யாதகுற்றமெல்லாம் செய்யலாகுமோ

## அசோதை தரு.

செய்யத்தகாதென்று செப்புமொழியினாலே
வையுதேமனம்வாடி நங்கைஎன்செய்வேன்

## நந்தகோபன் தரு.

நங்கையரைசெய்தாலும் பங்கமுனக்கல்லவோ
சங்கதிதனையறிந்து சாற்றுவாய்மாதே

## வேறு அசோதை தரு

பிள்ளைமேல்கொடுமைகள் பேசுகிறீர்எந்தன்நாதா
கன்னியர்வாய்மொழி கவனமாய்கேட்கிறீர்நீர்

## நந்தகோபன் தரு.

எள்ளளவாகிலும் ஏனோபுத்தியில்லை மாதே
சின்னக்ஷ்ணன்தினம் சூதுசெய்யலாமோ நீதே

## அசோதை தரு.

சூதுசெய்யமகன்சூரனோ நீர்சற்றுபாரும்
யாதவர்சொன்னாரோ மைந்தன்செய்தகுற்றம்சொல்லும்

### நந்தகோபன் தரு.

அறியவேசொல்கிறேன் ஆயர்பாடிதினம்சென்று
உரியறுத்துபால்குடிக்கவே மாதாகள்கண்டார்

### அசோதை தரு.

சண்டாளிவார்த்தையை சற்றும்
காதில்கேட்க லாமோ மன்னா
தண்டனைசெய்யவும் நீதியுமாகுமோ என்னா

### நந்தகோபன் தரு.

மேட்டிமையாய்பேசுராய் மெல்லியாணிர்திடுஞ்சேலை
கூட்டிப்பிடித்துமேகோஷ்டங்கள் செய்தானேதேனே

### அசோதை தரு.

பாலைக்குடித்துமேமாதர் தனத்தையும் நாதா
சேலைக்களைந்துமே தேனைவிடுவது சூதா

### நந்தகோபன் தரு.

அரிவையென்றால்நீயும் அரிவையால்லவோமாதே
குறைவென்றுபாருமே கோதையர்கூடினல்வாதே

### அசோதை சிசபத்தியம்.

மாதவம்செய்துமே மைந்தனைப்பெற்றுமே
மன்னனேசொல்வது சரியுமல்ல
தீதுசெய்யாதே தெரிவையர்சொல்கேட்டு
சிங்காரமான என்பிராணநாதா
பாதகம்முன்னளில் பாலன்செய்தானோ
பற்றுதேஎன்னிட தேகமெல்லாம்
சாதனைபாகவே கோபியர்யாவரும்
புன்னகைசெய்வார் பிராணநாதா

வசனம்.

சேளும் எனதுபிராணநாதா பன்னீராயிரப்கோபிகளும் தினந் தோறும் நமதுபிள்ளைமீதில் குற்றம்குற்றம்என்று சொல்வது வழக்கம் அதுபோல இன்றையதினமும்சொன்னால் அதைமெய்யென்று நம்பி கிருஷ்ணனை கானகம் அனுப்புவது சரியல்ல என்பிராண நாதா.

நந்தகோபன் கவி.

கற்றதைபேசவந்தாய் கன்னியேயுன்மைந்தன்மீது
உற்றதையாறுரைப்பேன் உகந்துநீகேளுமிப்போ
பத்தியாயயார்பெண்கள் பாவையர்அருகில்சென்று
உற்றதோர்தயிர்பால்தின்று உரியதையறுக்கலாமோ.

வசனம்.

கேளும் பெண்ணே பிராணநாயகி கிருஷ்ணனானவன் தினந் தோறும் கோபியர்வீட்டில் சென்று பால் தயிர் வெண்ணெய் நெய் இதுகளெல்லாம் சாப்பிட்ட துன்பம் தவிற அவள்பேரில் பாம்பு தேளைவிட்டு துன்பப்படுத்தலாமோ பெண்ணே பிராணநாயகி.

அசோதை கவி.

இராஜனேபெண்களெல்லாம் ரகசியமாகவந்து
பேசியவார்த்தைகேட்டு புலிபோலச்சீறியும்
ஆசையும்வெறுத்துத்தள்ளி ஆரண்யமானகாட்டில்
மாசில்லாபாலன்தன்னை மன்னவா அனுப்பவேண்டாம்.

வசனம்.

கேளும் எனது பிராணநாதா கோபியர்கள் பேச்சைக்கேட்டு கரடி புலி சிங்கம் பெருத்தகாட்டில் அனுப்புவது தகுதியல்ல பிராணநாதா:

நந்தகோபன் தரு.

என்னடிநான்சொல்லச்சொல்ல
பேசுறாய்
ஏந்திழையேநீமறுத்து
சொந்தம்வீசுறாய்

அசோதை தரு.

பண்ணும்விதப்போலவே
லாகாதே
நீபாலனையனுப்பிவிட
ஏகபோகாதே

நந்தகோபன் தரு.

கோபாலனிப்படிக்கி
செய்கிறான்
குற்றமதுதினந்தோறும்
அவரைவைகிறான்

அசோதை தரு.

சாவதெப்படிவரும்
நாதா
நல்லமைந்தன்தனையனுப்ப
நவநீதா

நந்தகோபன் தரு.

ஆயரில்லம்தன்னிற்சென்று
ஆடுறான்
அனுதினமும்பாலையுண்டு
எங்கும்ஓடுறான்

அசோதை தரு.

சேயனைக்காட்டிலனுப்ப
செய்கிறாய்
சிந்தையதுதான்கலங்க
போகவைகிறாய்

நந்தகோபன் தரு.

பிள்ளையை அனுப்புமென்றால்
கண்டபடிதிட்டுறாய்
கன்னியென்னை
வந்துவைகிறாய்

அசோதை தரு.

பிள்ளையை அனுப்பிவிட்டு
பாதகிமனம்
பேதையரும்என்னசெய்வேன்
வேகுதே

நந்தகோபன் கவி.

முடுக்குடன்பேசவந்த மொய்குழலாளேகேளாய்
அடுக்குமோஆயர்பாடி அரசுகாம்செய்யும்போது
துடுக்குடன் அங்குசென்று தோகையைபங்கஞ்செய்து
கெடுக்கிறாய்மாமாயும் கிருஷ்ணனையழைத்திடாயே.

### வசனம்.

கேளும்பெண்ணே எனது பிராணநாயகி நமது பிள்ளை தினந் தோறும் யாதவர்களை அவமானஞ்செய்தால் அவர்கள் எப்படியிருந்துபிழைப்பார்கள் ஆகையால் நமதுபிள்ளையை அதிசீக்கிரம்அழைத்து வாரும் பெண்ணே பிராணநாயகி.



### கிருஷ்ணன் விருத்தம்.

தந்தைதாயழைத்தசேதி தனையனுங்காதில்கேட்டு
பந்தயமாய்கதிரோன்போலே பதக்கமும்மார்பில்மின்ன
அந்திரர்மாரிபெய்ய அரிவையர்ஆலமேந்த
சுந்தரமானகண்ணன் சொகுசுடன்வருகின்றாரே.

### கிருஷ்ணன் தரு.

ஆயர்பாடியையாளும் அரசன்மதலையான
அரிகிஷ்ணதேவர் வந்தார்
அன்புடன்யாதவர் இன்பமாய்சூழ
அரிகிஷ்ணதேவர் வந்தார்
தாயார்அசோதைதன்னை தனையன்யான்காணவேண்டி
(சுருள்) தண்டையும்இருபாதம் வெண்டயம்கொஞ்சம்
குண்டலமாடிட கண்டவாஞ்ச (ஆயர்)

கோபாலமாதரிட கோவுதயிர்பால்தின்று
கொடியுரியெல்லா மறுத்தேன்

கூவியேயாவரும் ஆவிகள்பதரிட
கொடியுரியெல்லா மறுத்தேன்
மாபலியையளக்க மண்ணையளந்துநின்றேன்

(சருள்) மதித்திடயாவரும் துதிக்கவேதேவரும்
துதித்திடயாதவர் பத்தியாய்த்தொழுதிட (ஆயர்)

மார்பில்பதக்கமாட மோதுஞ்சல்லாரிபோட
முனிவரதிசயிக்கவே முகமதிலேகாந்திதகதகென்னவே
கொத்துமணிகள்மின்ன கோர்வைசரங்களாட

(சருள்) கொடியபூதகி மடியவேசெய்தேன்
கெடிபெறபாலனாய் குடித்துமேகொன்றேன் (ஆயர்)

கோபாலவன்னியன்கூறும் நாராயணசாமி
குழந்தையாகவேபிறந்தேன் நல்ல குலமதுதழைத்திட-கு
பாலன் கோவிந்தசாமி பாடும்கவியதனை

(சருள்) பதவிகள்தந்திட உதவியாய்வந்தேன்
சதமெனஎன்னிரு பதமதைதந்தேன் (ஆயர்)

## கிருஷ்ணன் நொண்டிச்சிந்து.

அன்னைமொழி தன்னைகாதில் வாங்கிட - யாதவர் பாலகரை விட்டு நீங்கியே - வேகமாய்வரும் நடையால் யாதவர் அண்டர்களும் ஏங்கிமனம் - கண்டுவாடவே ஆரமான கோலமணிகள்-அங்கமதில் காதிலிரு குண்டலம் தான் சொலிக்க பாடிவேந்தன் மைந்தனென்றுமே - யாவரும் கோபாலமாதர் கண்டு பாதம்பணிய நீதிராஜன் சபை தன்னையே - காணவே நிகரில்லா சந்திரன் போல் வந்து நின்றான். (தந்தா)

### கிருஷ்ணன் தரு.

அன்னையேசருணம் உமதுபாதம்
சின்னவன் சருணம்
நன்னயமாகவே நற்சபைதன்னிலே
என்னையழைத்ததை இயம்புவாய்யென்தாயே

### அசோதை தரு.

மகனேநீவாழி அடிபணிந்த
சுதனே நீவாழி
ஜெகமெல்லாம் புகழ்ந்திடும்தேவாதிதேவனே
அகமதுகளித்திட அசுதேவன்மைந்தனே

கிஷ்ணன் கவி

என்னைநீயழைத்ததென்ன இந்தசற்சபையில்தானே
முன்னையேஎந்தனுக்கு மொழிந்திடும்வார்த்தைதன்னை
சொன்னாலேயான் தடுக்கேன் சொருகுள்ளஎந்தன் தாயே
அன்னையேஎனக்குரைத்தால்அதற்குயான் தடைசொல்லேனே

கிஷ்ணன் வசனம்

கேளும் அன்னையே என்னை அழைத்த சங்கதிஇன்ன தென்று தெரியச்சொல்லும் என்தாயே

அசோதை கவி

பதஷ்டமாய்சென்றுநீயும் பால்வெண்ணெய்உண்டதாலே
இஷ்டம்போல்தயிரையெல்லாம் இன்பமாய்உண்டதாலே
துஷ்டனேநின்னதாலே தோகையர்என்னிடத்தில்வந்து
நிஷ்டூரம்சொல்லிவிட்டார் நிகரில்லாயாதவாளும்.

வசனம்,

கேளும் எனது குமாரசெல்வமே தினந்தோறும் யாதவாள் வீட்டிற்சென்று தயிர் மோர் சாப்பிட்டு அவர்கள் நித்திரை செய்யும் சமையத்தில் பாம்பு தேள்களை விட்டதுமல்லாமல் அவர்கள் பசுக்கூட்டங்களையும் அவிழ்த்து ஓட்டிவிட்டதாக உன் தந்தையரிடத்தில் வந்துமுறையிட்டார் அதற்காக அழைத்தேனடா குமார செல்வமே.

கிருஷ்ணன் தரு.

எந்தனிடதந்தையும் குந்தகம்சொல்லிட
என்னவார்த்தைகளது ஓதுவாய்

அசோதை தரு.

மைந்தனேகேளும்நீ மாதர்களில்லத்தில்
சுந்திரா தயிர்மோரை உண்டதாலே

கிருஷ்ணன் தரு.

சத்தியமாகவே பத்திமாயில்லமே
உத்தமியேபோன இல்லைகேளுமே

அசோதை தரு.

கன்னியர்சேலையை பின்னமாய்செய்தநீ
பின்னங்கள்செய்த துண்டோசொல்லடா

கிருஷ்ணன் தரு - வேறு.

தந்தையும்தாயும் தனையன்மீதில்
குந்தகம்செய்வதென்ன என்தாயே

அசோதை தரு.

பண்ணுவேன்கேளும் பாவையர்கூடி
மாராளும்ராஜனுக்கு என்பாலா

கிருஷ்ணன் தரு.

கூடியேவந்து கோபாலரெல்லாம்
குற்றங்கள்ஏதுரைத்தார் என்தாயே

அசோதை தரு.

பாடியில்வாசம் பாவையரில்லம்
பாலைநீயுண்டதினால் என்பாலா

கிருஷ்ணன் தரு.

என்னையும்நீயே இச்சேதியரிய
புகன்றிடவேணுமம்மா என்தாயே

அசோதை தரு.

அந்தரைமேவி தந்தையைக்கண்டு
அரிந்துநீகொள்ளுவாயே என்மகனே

கிருஷ்ணன் கவி.

அருமையாய்வளர்ந்தஎந்தன் மாதாவும்சொல்லக்கேட்டு
நல்லவன்போலேகிருஷ்ணன் அகத்துமேவர்மமாகி
அல்லலுமில்லாக்கோப அரசனைக்காணவேண்டி
எல்லையைஅரிந்தபாதன் இன்பமாய்வந்துநின்றார்.



## கிருஷ்ணன் தரு.

தந்தையேஉந்தனிருதாளினை பணிந்தேன்யானும்
வந்தனங்கள்செய்துகின்றேன் வர்மமெல்லாமோ

## நந்தகோபன் தரு.

மைந்தனேநீஎந்நாளும் மகாராஜனுய்வாழ்ந்திடுவாய்
சுந்திரமாய்தாள்பணிந்தாய் தாள்பணிந்தசுதனேநீவாழி

## கிருஷ்ணன் தரு.

தந்தையரேகானுவர்ண சாதியால்எனையழைத்த
விந்தையாகஎந்தனுக்கு உரைத்திடுவீரே

## நந்தகோபன் தரு.

உரையுமென்றமைந்தனேகேள் உனக்கென்னபுத்தியோ
அரையுமொழியதனைக்கேட்டால் உலகம்நகைக்குமே

## நந்தகோபன் கவி.

யாதவகுலத்துதித்த அருமைசேர்புதல்வாகேளும்
மாதகன்என்றூர்உன்னை பலதுன்பம்செய்ததாலே
மாதர்கள்முன்னில்லாமல் மனதினில்வர்மமெல்லாம்
சாதகமாககோவை சம்மதித்தோட்டிடாயே

## நந்தகோபன் வசனம்.

கேளும் எனது குமாரச்செல்வமே தினந்தோறும் யாதவர் வீட்டில்சென்று தயிர்பாலைகுடித்ததுமல்லாமற்படிக்கி அவர்களைத் துன்பம் செய்ததால் வருத்தமடைந்துஇருக்கின்றார்கள் ஆகையால் ஆவுகளை ஓட்டிக்கொண்டு கானகஞ்சென்று வாரும் குமாரச் செல்வமே.

## நந்தகோபன் நொண்டிச்சிந்து.

என்னடா சின்னகிருஷ்ணா - கோபியர்எப்போதும்வந்தனது தப்பிதம் சொல்லிஅப்பப்பா இந்தவூரில் - நாங்கள் அரைக்ஷணமு மிருக்க மாட்டோ மென்று குய்யோமுறையோவென்று - எப்போதும் கூச்சலிட்டழுகின்றா ரென்ன செய்வோம் நீ செய்யும் துஷ்டதனத்தால் - அவர்கள் நிலைக்காமல் ஊரைவிட்டு போகிறோ மென்றார் கோபியர் வீட்டில் நுழைந்து - சதிபதியின் கொண்டை குடுமி தனைகட்டிவிட்டு பாம்பை விடுகின்றாயாம் - அவர்கள் பதைத்து துடித்தோடமுடியாமல் எழுந்தோடி வெளியில்விழுந்தால் - நீஎதிரில் நீ நின்றுகொண்டு சிரிக்கின்றாயாம் உறியின் மீதிலேறி - தயிர் வெண்ணை பால் உண்டுவிட்டோடுகின்றா யென்றார்கள் நமது வீட்டில் தயிர்மோர்பால்வெண்ணையும் நலமாகயிருக்க நீ திருடுவதேன் துஷ்டத்தனஞ் செய்தால் - கோபியர் தேசத்தை விட்டோடினா லென்னசெய்வோம் ஒருவனால் ஊர்கலகம் - நடப்பது உதவாது சின்னகிருஷ்ணா ஆகையினால் பசுக்கூட்டத்துடனே - நீயும் பசுமுடன் காட்டுக்குப்போய் மேய்த்துக்கொண்டிரு ஊர்கலகமையான பிறகு-யானும் உனையழைத்துக்கொண்டு வந்து கலியாணஞ்செய்து குடும்பஸ்தனாகச் செய்வேன் - என்சொல்லை குருவாக்யம் போல் மதித்து பசுமந்தையை கானகத்தில் மேய்த்துக்கொண்டு - நீகாலங் கழித்திடுவாய் கோபால கிருஷ்ணா இதை நீ கவனிப்பாயே.

## கிருஷ்ணன் வசனம்.

உமது வார்த்தை கடவாமற்படிக்கி பசுக்கூட்டங்களை ஓட்டிக் கொண்டு போய்விடுகிறேன் தந்தையே.

## கிருஷ்ணன் கவி.

குந்தகம்சொல்லிப்போன கோபிகள்வார்த்தைக்கேட்டு
தந்தையர்சொல்லைக்கேட்டு தனையனும்மகிழ்ச்சியோடு
சந்திரன்உதையம்போல தரித்திடும்கட்டவிழ்த்து
அந்தமாய்கானில்செல்ல அரிகிருஷ்ணன் வருகின்றாரே.

## கிருஷ்ணன் தரு.

தந்தையர்சமுகம்சென்று　　தனையருடம்விடைகள்பெற்று
　　தங்காமல்கடந்துவாரேனே　　காராவைபோட்டி
　　　　பொங்கமாய்　　[illegible]ங்காவாரேனே

ஆனைமுயல்சிங்கம்பன்றி　　அன்னமதுவாசமிடும்
　　ஆனைதனைமூட்டிவாரேனே　　வனங்கள்போக
　　　　கோவனைதயும்　　கூட்டிவாரேனே

ஆயர்பாடிதன்னில்வாழும்　　யாதவகுலகோபி
　　அரசனிடகலிகள்கூறவே　　அம்மாதர்கள்கண்டு
　　　　திருவன்வந்து　　மனக்தேறவே

இந்தவனசுந்திரம்போல்　　எங்கிலும்யான்கண்டதில்லை
　　சுந்திரகானகம்கண்டேனே　　கிருஷ்ணதேவர்
　　　　வந்துமேமகிழ்ச்சி　　கொண்டேனே

காடியதுபயமுறுத்து　　கானல்வீசும்காட்டினிசே
　　காராவெல்லாம்சாய்த்துவிட்டேனே அரிகிருஷ்ணதேவர்
　　　　குறைவில்லாமல்　　மேய்த்துவிட்டேனே

## நாரதர் வருகிற கவி.

அரகராசிவனேயென்று அன்பாய்ருத்திராக்ஷம்பூண்டு
சிரமதுஅதிந்தோன்செல்வன் ஜெபமாலைகரணிந்து
கரந்தனில்வீணையேந்தி காவிகாம்பறமிலக்க
நாகமுடிமிஸ்லாவல்லோன் நாரதர்வருகின்றாரே.

## நாரதர் தரு.

வந்தார்நாரதமுனி　　பாரீர்கயிலைவாழும்
ஈசர்பாதந்தை　　திணம்கோரி
வந்தார்நாரதமுனி　　ஜெபமாலைகரணிந்து
கந்தங்களபம்வீச　　கவசகுண்டலமாட

　　வித்தைதனில்சிறந்தமுனி　　நாவேரேழையுலகாம்
　　வியர்க்ககை　　மூட்டுவேனே
　　சித்தம்சிவனேத்தானே　　நிதமும்துதிக்கும்சீலன்
　　சத்தியலோகவாதி　　சரஸ்வதிதந்தசீலன்

வெண்ணீறுமெய்யினில் பூசிகரமதிலே
வீணைதந்திக ளெல்லாம்பேசி
கண்ணன் தன்னையேகாண கனவேகமாய்நடந்து
விண்ணுலோகத்தைவிட்டு வீணையைமீட்டிக்கொண்டு

எத்திசைதிரிந்திடுமய்யன் நொடிதனிலே
இசையோடுயாழி மீட்டுமெய்யன்
முத்திவழியைத்தேடி முப்பிரிநூலுமிட்டு
அத்தனையைக்காத்தசீலன் அரிகிருஷ்ணதேவர்முன்னே

## நாரதர் கவி.

வாரணந்தன்னைக்காத்த கண்ணனைக்காணவேண்டி
சீதரன்வீணையேந்தி சிவசிவாஎன்றுரைத்து
காரணன்காராவைமேய்க்கு கானவின்வழியைத்தேடி
நாரதர்யாழிமீட்டி நலமதாய்பாடிவாரார்.



நாரதர் கிருஷ்ணனைக் காணுதல்.

சங்குதரித்தகையா சரணம்
நாரதமுனியானும் தருணம்

### கிருஷ்ணன் தரு.

சங்கரன்கிருபையாலே பொங்கமுடனெந்நாளும்
வாழி நீடூழி

### நாரதர் தரு.

உந்தனிடஇருப்பாதம் உண்மையுடன்யான்பணிந்தேன்
சருணம் நல்லதருணம்

### கிருஷ்ணன் தரு.

வந்ததினுல்சந்தோஷந்தான் எந்தலோகம்
இருந்துவந்தீர் சென்றுவந்தீர்

### நாரதர் தரு.

பிர்மன்பதிதன்னை விட்டுஉந்தனிடம்
நாடிவந்தேன்பாரும் கிருபைதாரும்

### கிருஷ்ணன் தரு.

வரமதுஉனக்குதந் தேன்வந்தவிதம்
எந்தனுக்குவழங்கும் சொல்லிமுழங்கும்

### நாரதர் தரு.

சொல்லுவேன்நான் உன்னைப்பார்க்கசந்தரனை
உன்னிடத்தில்வந்தேன் பாதம்சொரந்தேன்

### கிருஷ்ணன் தரு.

சொல்லுவதுமெய்தானப்பா போரவிடம்
எந்தனுக்குசாற்றும் நீர்சாற்றும்

### நாரதர் கவி.

மண்ணைதயுண்டமாயா மாடுநீமேய்ப்பதென்ன
வெண்ணைசெய்திண்ணும் விடுதியைவிட்டுப்போட்டு
கண்ணனே அலைகபோல கானலில்திரிகின்றாயே
திண்ணமாய்யாருங்கூடி தேவலோகங்கள்போவோம்

வசனம்.

அஹோகேளும் கிஷ்ணபகவானே அரண்மனையிலிருந்துவெண்ணெய்பால்செய்முதலியவற்றைதின்று கொண்டிருப்பதைவிட்டு அலைகபோல கானகத்திலைந்து இத்தகானவில்ஆடுமாடுகென்றுகளைமேய்த்துக்கொண்டு திரிகின்றுயே இது உனக்கு சரியல்ல நாமிருவருங் கூடிதேவலோகம்போய்வரலாம்வாரும் கிஷ்ணபகவானே,

கிஷ்ணன் கவி.

கானகந்தனில்வசித்து காலிகளுடுப்போர்க்கெல்லாம்
மேலானவிதமிருந்த மேன்மைசேர்முனியேகேளும்
நானுமன்பதினைவிட்டு நானுமேவருவதில்லை
வானவிந்திரலோகம் வாருடன்செல்லுவாயே

வசனம்,

அஹோகேளும் நாரதபகவானே நான் இம்மண்ணுலகத்தைவிட்டுவிண்ணுலகம்வருவதில்லை நீர்மாத்திரம் இந்திரலோகம்போய்வாரும்நாரதமுனியே

நாரதர் கவி,

இந்தநாள்னந்தனுக்கு எங்குமேவேலையில்லை
அந்தநாளன்னுடனேகூட சொருசுடன்தெய்வலோகம்
அந்தநேரிடமும்போக அடியவன்பின்னேநீங்கள்
முந்தநம்கொள்ளாவண்ணம் கூடியேவருகுவாயே

வசனம்.

அஹோகேளும் கிஷ்ணபகவானே எனக்குயின்றைதினம் எங்குமேவொருவிதவேலையில்லாதபடியால் நான்தெய்வலோகம் போகஎன்னையிட்டு உன்னையும் அழைத்துக்கொண்டு போகவிடம்வந்தேன் ஆகையால்நாமிருவரும் கூடிக்கொண்டு போகலாம் கிஷ்ணனேயே.

கிஷ்ணன் தரு.

மல்லுனிடலாகாதையனே உன்றேடுசென்றால்
தொல்லையாயிருக்கு மெய்யனே
நல்லதல்லவுனக்கிது நாரதாவுன்பின்னுல்வர
அல்லவபுன்துலேக ஆரண்யத்தன்னில்வந்தேன்

## நாரதர் தரு.

என்னகுற்றங்கள்செய்குவேன் அவ்விடம்சென்றால்
எவரை அவ்விடம் வைகுவேன்
பன்னும்சீதைதமனுமாபாரந்தாமா என்னுடன்வாரும்
நன்னியமானதேவாநாரதன் கூடிவாரேன்

## கிஷ்ணன் தரு.

நாரதாகலகஞ்செய்குவாய் அவ்விடம்சென்றால்
நல்லதேவனை வைகுவாய்
மாரிவழிநடப்பாய் மாமுனியேநீரும்
சாமியாகவேயோவாய் சங்கதிகண்டுமீளும்

## நாரதர் தரு.

ஒன்றும்நான்செய்யமாட்டேனே கூடியேபோனால்
உரைப்பதைபாரும் கேழ்ப்பேனே
குன்றுகுகைகடந்து கூடும்வழியைநாடி
கன்றுகாரானைவிட்டுகடுகவே நாமுஞ்செல்வோம்

## கிருஷ்ணன் தரு.

வேடிக்கையேன் நீ பேசுறாய் முனியேவந்து
சாடியெனை யிழுக்கிறாய்
நாடிநீவாருமென்றால் நானுமேவாரதில்லை
கூடிவந்துஇழுத்து கூறுவதும்தொல்லை

## நாரதர் தரு.

கோபங்கள்ஒழும் நாதனேஉலகளந்த
கோமானாய் வந்தபாதனே
ஆபத்தைக்காருமென்ற யானையைக்காத்தவா
தாமதம்செய்திடாமல் சல்தியாய்வருகுவாயே

## கிருஷ்ணன் கவி

வரமாட்டேனென்றுரைத்தால் வழிபறமறித்துநீயும்
உரைத்திடும்வார்த்தையெல்லாம் ஒப்புநான்கொள்வதில்லை
இனமுடன்கூடிப்போனால் நகையும்செய்யப்போறாய்
சிரமொன்றுமுனிக்கேநான்மைந்தா செய்குவாய்பங்கந்தானே

## கிருஷ்ணன் வசனம்.

அகோகேளும் நாரத பகவானே நான் உன்னுடன் கூடிவரப் போகிறதில்லை அப்படி கூடிவந்தனேயாமாகில் தேவர்கள்கூடியிரா நின்ற சபையில் ஏதாவது கலகம் விளைப்பாய் அது எனக்கு பங்கமாகும் நீ எவ்விதசமாதானம் சொன்னாலும் நான்ஒப்பமாட்டேன் முனிநாதனே.

## நாரதர் விருத்தம்.

சத்தியமாக அந்த சங்கரர்தேவிஎன்னும்
உத்தமிமீதிலாணை ஒருதுன்பம்செய்யமாட்டேன்
நத்தினேன்தெய்வலோகம் நாமிருவருமேவக
கர்த்தனேஇந்தநல்ல கானகவழியாய்செல்வோம்.

## வசனம்.

அகோகேளும் கிருஷ்ணபகவானே சத்தியமாகசொல்கிறேன் சங்கரர்தேவியாகிய பார்வதிதேவியார் மேலாணைப்படி நான் ஒருவருக்கும் யாதொரு துன்பமும் கலகமும் செய்யமாட்டேன் என்னுடன் கூடி வாரும் பகவானே.

## நாரதர் தரு.

வாரும்நீ என்னுடன்கூடி
வானுலோகம் போகவழியிதுவே

## கிருஷ்ணன் தரு.

பாரவனத்தில் வரஇப்போ
பலஜாதிபக்ஷிகள் உலாவுதுபார்

## நாரதர் தரு.

புள்ளிமானும் கள்ளத்தனமாக
போகிறவேகமதை பாருமையா

## கிருஷ்ணன் தரு.

கிள்ளையென்னும் பள்ளத்திலேஒரு
கீர்த்தியுள்ளசிங்கம் போகுதுபார்

### நாரதர் தரு

யானைகமுகமரங்களை அடியோடே
பேர்த்து இழுக்குதுபார்

### கிருஷ்ணன் தரு.

மானுபெரு நரிகூட்டங்கள்
மகுடமரந்தனில் முறுத்துதுபார

### நாரதர் தரு

நடந்துவாரும் அதிவேகமாகவே
தோணுதுபார் வழிகாணுதுபார்

### கிருஷ்ணன் தரு.

துடர்ந்துவந்தேன் நான்வெகுதூரமே
தூரமுண்டோஎனக் குறைத்திடுவாய்

### நாரதர் தரு

வாரணன்தன்னைக்காத்த வண்ணனேவாரும்வாரும்
சிரசகளந்தனோடு சீக்கிரம்தெய்வலோகம்

### கிருஷ்ணன் தரு.

சிராகவாறுலோகம் சிறப்புடன்கண்டேனிப்போ
ஆரணன்வழிநடந்து அன்புடன்வருகுவேனே

### நாரதர் தரு

அண்டினோம்தெய்வ லோகமதுதன்னையே
அழிஞ்சமா நிழலோரமாம்
அன்புடன்நடந்து வாரும்பிள்ளையே

### கிருஷ்ணன் தரு.

ஆரணன்உன்னுடன் யான்சென்றேனே
அங்கமுடனே இந்திரலோகம்
அய்யனேஅருகில் வந்துநின்றேனே

### நாரதர் தரு

கோட்டையும்கொடி மரமும்நீருமே
கோணதயர்குதும் நிதமும்நன்றாய்
கேட்குதேநடந்து கிட்டிவாருமே

## கிருஷ்ணன் தரு.

மாளிகைதெரியு இதோநேரதாய்
மனமகிழ்ந்து கனவேகமாய்
மாருமல்வருகின் றேனே சிரதாய்

## பொது வசனம்.

இவ்விதமாக கிருஷ்ணபகவானும்நாரதமுனியும் தெய்வலோகத்தைநாடி அடைந்தபோது தேவலோகத்துக்கு அதிபதியாகிய தேவேந்திரன்கொலுவைநாடிவருகிறவிதம்காண்க.



## தேவேந்திரன் கவி.

நவரத்னகிரீடமது சிரசிக்பூண்டு
நாரியர்கள்நால்வருமே கவரியீச
கனமுள்ளமந்திரிமா ருமிக்குழ
கத்தியுடன்கேடயமும் கரத்திலேந்தி

புவனமெல்லாங்கிடுகிடென கெடிமுழங்க
பூவையூர்வசிரம்பை நடனஞ்செய்ய
அவனியாசாராசர்களும் படியில்தாழ
அரசனென்னும்தேவேந்திரன் வருகின்றாரே.

## தேவேந்திரன் வசனம்.

பொன்னுலகை யாளப்பட்ட தேவேந்திர மகாராஜன் தேவர்கள்புடைசூழ கன்னியர்கள் ஆலாத்தியேந்த கவிவாணர் ஜெயங்கூறப்பட்டவேர்கள்பாட தேவேந்திரமகாராஜன்கொலுவுக்கு வருகிற விதங்காண்க.

## தேவேந்திரன் தரு.

இராஜ ராஜேந்திரன் ராஜன் தேவேந்திரன்
இராஜன்கொலுவதாகினர் வெகுவேடிக்கையாக
அந்தணர்வேதமோதஅருகில் முனிவர்கள்தாழ
விந்தையுடனேஇந்த விண்ணுலோகத்தோர்சூழ
(சருள்) வித்தகதேவரும் வீரரும்வாட
பத்தியாய்ரம்பை திலோர்தமைபாட (இராஜ)

பாரிலாசர்க்கெல்லாம் பலமுள்ளாவீரதீரன்
பார்த்தோரதிசயிக்கவே வெகுஉன்னிதமாக
பார்த்தோரதி சயிக்கவே
நாரியெனும்ரம்பை நடனமிட்டிடுமாரன்
(சருள்) நல்லதோர்மந்திரி நீதிகள்புரிய
வல்லவரெவர்களும் வலுவதையரிய (இராஜ)

நீதிதவரிடாமல்நெறியாய் பார்த்திடும்வேந்தன்
நீண்டமுடிகள் துன்னவே நல்லகதிரவன்போலே
நீண்டமுடிகள் துன்னவே
காதில்குண்டலமாட காத்தில்செங்கோலிலங்க
(சருள்) சுச்சிதபதக்கமும் உச்சிதமாக
வச்சிராயுதம் இச்சையதாக (இராஜ)

விண்டலமதிசயிக்க விருதுகொடிபறக்க
மண்டலத்தோர்கள்வந்து மணிமுடிகள் துதிக்க
(சருள்) மண்டியஇருபாதம் தண்டையும்கொஞ்ச
சண்டனென்றுமே கண்டவரஞ்ச (இராஜ)

## தேவேந்திரன் விருத்தம்.

தேவரேமுனிவரேகேள் சிரந்தயெண்ணேடெப்போதும்
ஆவலாய்காத்திருக்கும் அனைவரும்க்ஷேமந்தானு

காவலர்திக்குப்பாலர் கனசபைவருவோரெல்லாம்
தாவியேவந்திட்டாரு தானெனக்குறைத்திடீரே.

வசனம்.

கேளும் தேவர்களே முனிவர்களே நான் ஆளப்பட்ட தெய்வலோகமெல்லாம் க்ஷேமமாயிருக்கிறதா வரப்பட்டபேர்களனைவரும் வந்தார்களா தெரியச்சொல்லும் தேவர்கள் முனிவர்களே.

## தேவர்கள் விருத்தம்:

அனைவரும்வந்திட்டார்கள் அரசேநின்கொலுவுதன்னில்
மனமதுகுறைவில்லாமல் மகிக்ஷியாய்வாழ்கின்றார்கள்
தனதுசெங்கோலுக்கு தாழ்வுமெப்போதுமுண்டோ
இனியதோரரசுசெய்யும் இந்திரமன்னாபோற்றி.

வசனம்.

கேளும் தேவேந்திரமகாராஜனே நாம் ஆளப்பட்டபொன்னுலகமும் அதிலிருக்கப்பட்ட தேவர்களும் மைத்துமுள்ளபேர்களும் க்ஷேமமாயிருக்கிறார்கள் தேவேந்திரமகாராஜனே.





## தேவேந்திரன் தேசவிசாரணை.

அவனியிலுள்ள ஆலயங்களிலே
ஆறுகாலம்பூசை நடக்கின்றதா

## மந்திரி தரு.

புவியினிலிருக்கும் ஆலயந்தனிலே
பூசைகள்குறைவின்றி நடக்கின்றதே

## தேவேந்திரன் தரு.

பாரினிலுள்ள பலமுள்ள அரசர்கள்
பகுதிகள்-சிவர செலுத்துறாரா

## மந்திரி தரு.

கோரினமனம்போல் குவலயத்தரசர்கள்
குணமுடன்கப்பணம் கட்டுகின்றார்

## தேவேந்திரன் தரு.

மாதங்கள் தவறாமல் மேகங்கள்கூடி
மாரிகள்பெய்கின்றதா உரைத்திடுவாய்

## மந்திரி தரு.

ஆதரவாகவுடன் ஆக்கினைப்படியே
அன்புடன் பெய்கின்றதே அரசே

## தேவேந்திரன் தரு.

மாதவமுனிவர்கள் செய்திடும்வேள்விதான்
மறுவின்றி நிறைவேறுதா

## மந்திரி தரு.

முனிவர்கள்செய்திடும் யாகாதிவேள்விகள்
முறைப்படிநடந் தேறுதே அரசே

## தேவேந்திரன் தரு.

அசுரர்கள் அழிந்துமே அமரர்கள்பெருகியே
அன்புடன்வாழ் கின்றாராமந்திரி
தென்புடன் வாழ்கின்றார

## மந்திரி தரு.

அண்ணலே அமரர்கள் அ—— அமுததுமே
அன்பாய்வாழ் கின்றீரோ அரசே
தென்பாய் வாழ்கின்றீரோ

## தேவேந்திரன் தரு.

மூவுலகும்புகழ் செங்கோல்நீதிகள்
முறையாய்நடந் தேறுதா மந்திரி
முறையாய்நடந் தேறுதா

## மந்திரி தரு.

முன்னவனே தேவர் அரசாட்சிநீதிகள்
மூவுலகும்புகழ் கின்றதே அரசே
மூவுலகும்புகழ் கின்றதே

## தேவேந்திரன் கவி.

அருமையென்தோழரேகேள் அடைவுடன்நீங்களோடி
பெருமையாயங்கிருக்கும் பேசையாள்னைதுதேவி
தருவிழலிந்திராணி தன்னைநானழைத்ததாக
அருகினில்வீற்றிருக்க அன்புடனழைத்துவாரீர்.

## இந்திராணி சீசபத்தியம்.

பங்கயரூபியாள் பாவைஇந்திராணியாள்
பருதிமிகவொளியென பணிகள்பூண்டு
தங்கஒட்யாணமும் சரிகைநல்சேலையும்
தையலாள்இடையிலே தான்தரித்து
தங்கநிறகூந்தலை கோதியேமுடித்துமே
கடிகமழ்மந்தாரை மலர்கள்சூடி
செங்கையில்கங்கணம் கடகமும்துன்னவே
சீரானபணிகளும் அலங்கரித்து
கொத்துடன்சரங்களும் தகதகென்னவே
கோலதயெனும் இந்திராணிவருகின்றாளே.

## இந்திராணி வசனம்.

அகோதெப்படியென்றால் தாமரைக் கமலம்போன்ற பிரகாச மாங்கிளர்க்கும், சுந்தரசொரூபியான இந்திராணியானவள்நவரத்ன கசிதமயமாய்த்துலக்கும் ஆடைஆபரண அலங்கிர்தத்துடனே கூட்

தலில் விதவிதமான நறுமணம்வீசும் மணமலர்களணிந்து ஒயிலாக அன்னம்போல் நடந்து தனது தோழிமார்கள் சூழ்ந்து மனோல்லாசமாய் வரவும், வெண்சாமரை வீசவும் இந்திராணியம்மாள் சபைக்கு வருகிறவிதங் காண்பீர்களையா சபையோர்களே.

## இந்திராணி தரு.

ஈசர்பதத்தைதினம் இணையடிமறவாமாது
இந்திராணிமாதுவந்தாள் தாதியர்கள்சூழ
இந்திராணிமாது வந்தாள்
கந்தங்களையம்பூசி கன்னியருடன்பேசி
சந்தனம்பரிமளங்கள் சாந்துசவ்வாதுபூசி
வஞ்சியர்புடைசூழ வர்ணகொப்போலேமின்ன
(சருள்) சங்கீதகன்னியர் எங்குமேபோட
கிங்கிரபணிகளும் அங்கத்திலாட (ஈசர்)

வஞ்சியர்புடைசூழ வர்ணகொப்புமிலங்க
கொஞ்சிநடந்திடவே கோர்வைசரங்குலுங்க
(சருள்) கொண்டகணவனை கோதையுங்காணவே
வண்டுவிழிமை வனிதையும்நீட்டி (ஈசர்)

தங்கசரங்கள்மின்ன தாவடங்கள்துன்ன
செங்கையில்வளையலும் கங்கணமிகசொலிக்க
(சருள்) சித்திரசுட்டியும் நெற்றியில்துன்ன
பத்தியாய்கையினில் பவுத்திரமின்ன (ஈசர்)

இட்டசரப்பளிகள் எங்குமொளிகள்வீச
பொட்டுமிலங்கிடவே பூவையர்முகமதில்
(சருள்) பொருமைகுணமுடைய புருஷனைத்தேடி
அரிவையும்இச்சபை பெருமையாய்நாடி (ஈசர்)

## இந்திராணி கவி.

என்னைநீஅழைத்ததேது என்னிடபிராணநாதா
கன்னிநான்மனையைவிட்டு கனத்தநீதார்சபையில்வந்தேன்.
உன்னிடஅரசுமுன்னே உகந்துநீஅழைத்ததென்ன
மன்னனேவரவேசெய்தாய் மங்கையாளரியத்தானே.

வசனம்.

கேளும் என்து பிராணநாதா தங்களுடைய பொற்பாதகமலங்களுக்கு அடியாள்வந்தனஞ்செய்தேன் என்னை இச்சபையைநாடி வரவழைத்த காரணம் எனக்குத்தெரியச்சொல்லவேணும் பிராணநாதா.

## தேவேந்திரன் கவி.

அரிவையேஇபம்பக்கேளும் அகத்தியமழைத்தசேதி
பெருமையாய்சொல்லக்கேளும் புத்தியில்சிறந்தமாதே
தேவர்தன்சபையோர்முன்னே தேவதாசியர்கூடிவந்து
அவர்செயும்நடனந்தன்னை அருமையாய்பார்த்திடாயே.

### வசனம்.

கேளும்பெண்ணே எனது பிராணநாயகி உன்னைஇச்சபையை நாடி வரவழைத்தது ஏதுக்கென்றால் நம்முடைய கொலு சிம்மாதனத்திற்கு முன்பாக ரம்பை, மேனகை, ஊர்வசி, திலோத்தமை என்று இப்படிசொல்லாநின்ற தாசிகள் நடனஞ்செய்யப் போகின்றார்கள். ஆகையால்உன்னையழைத்தேன் எனதுபக்கத்திலிருந்து பார்த்துக்கொண்டுஇரும் பெண்ணே எனது பிராணநாயகியே அப்படியே அமர்ந்திருக்கிறேன் பிராணபதியே. கேளும் எனது மந்திரியே அரம்பை முதலிய தாசிகளை நானழைத்ததாக சீக்கிரம் சென்று அழைத்து வாரும் மந்திரியே.

### கட்டியன் வசனம்.

கேளும்சபையோர்களே பரமசிவத்தைஇடைவிடாமல் மனத்தியானஞ் செய்து கொலுவீற்றிருக்குந் தேவேந்திர மகாராஜன் சபைக்கு அரம்பை வருகிறவிதங்காண்க.



## அரம்பை கவி.

மதியணியீசர்பாதம் மனதினில்மறவாமாது
கதிரொளிவதனமின்ன காலினில்தண்டைகொஞ்ச
பதியாளும்அரசர்முன்னே பலவிதமணிகள்பூண்டு
மதிமுகவதனமுள்ள அரம்பையும்வருகின்றாளே.

## அரம்பை தரு.

வானுலோகத்தில்வாசி    மானவர்க்கியலேனதாசி
வஞ்சிஅரம்பையுமவர்தான்    தங்கைமார்சூழ
வஞ்சிஅரம்பையும்    வந்தாள்
கானகமயிலென்ன    கரத்தில்கடகம்கொஞ்ச
இன்பமுடனேகொப்பு    இருகாதில்ஓலைமின்ன
(சருள்) இந்திரன்சபைதனில்    சந்திரமாக
கந்தமும்வீச    தந்திரமாக (வானு)

மார்பில்பதக்கமாட    மஞ்சள்மினுக்குப்பூசி
பாரிலிவளைப்போல    பாவையில்லையேதாசி
(சருள்) பாடிவோள்இவள்    பைரவிராகம்
தேடிவந்திடும்    புருஷனின்போகம் (வானு)

கம்மல்சிமிக்கிநத்து    காந்திநிகரென்ன
செம்மையுடன்ராகம்பாடி    சிராய்மலர்கள்சூடி.
(சருள்) செங்கையிலேபொன்    வங்கியும்அன்ன
பங்கமிலாமுத்து    தொங்கதுமின்ன (வானு)

பம்பரம்போலே    இருகும்பஸ்தனமிலங்க
செம்மையுடனேநல்ல    சேலைசரிகைமின்ன
(சருள்) தெரிவையும்பச்சைக்கல்    முருகுவதுமிட்டு
பெருவிழிமையுமே    அரிவையும்இட்டு (வானு)

## இந்திரன் வசனம்.

மாதே ரம்பா நான்உன்ஆடல்பாடல்களைப் பார்க்க பிரியமாகவேயிருக்கிறது.

## அரம்பை வசனம்.

அப்படியே நடிக்குறேன் உல்லாசம் கொள்வீர் தேவராஜனே.

## அரம்பை தில்லானா.

நாதிர திம திம் நநா திம்    தநநாச மகம்பத நிதபம் (நாத)
திம் திம் நாநந தாராரே    தாரே-தாநீ
என் எனினியடா    இந்திரனேமோடிசாமி (நாத)

நான் உன்னையே நம்பியே வந்தநுவும்
நாடியே கருத்தையும் நீபரியலாகும்
தா தா கிட தக துமமி கிட தக
கிரிநாரே தநகம்
வா தா மோடா ருதேனடா
வருந்தா நனே வாடிப்பாடி
மக ரிச கரி கநி ரிச நித சநி தபம் (நாத)

தேவேந்திரன் வசனம்.

இன்னமொரு பதம்பாடுவாய்பெண்ணே ரம்பா.

அரம்பை ஜாவளி.

கன்னல்மாரன் வில்லினாலே கலங்குறேன் பலகாலே
சின்னவயதானதாலே சிறுமியைச்சேர்ந்தாய்மண்மேலே
பஞ்சபாணன் அம்புகொண்டு பாய்கிறானிவ்வேளைகண்டு
அஞ்சலென்றெனக்கேவிண்டு ஆதரித்தால்சுகிர்தமுண்டு

வெவேந்திரன் வசனம்.

இன்னமொரு பதம்பாடுவாய் பெண்ணே,

அரம்பை ஜாவளி

சரசசல்லாப குணா நாதா நாதா இந்த
தையலாள் பதம்பணிந்தேன் வாதா வாதா
எனைக்கட்டியணைந்திடவே வாரும் வாரும்
கன்னியாளமுகமதனைப் பாரும் பாரும்
காமன்கணைதைக்குதையோ சேரும் சேரும்
பூமனே என்னைச்சேர என்று என்று

இந்திரன் வசனம்.

மகா சந்தோஷமடி பெண்ணே எந்தனருகில் வந்திருப்பாய் கண்ணே.

கட்டியன் வசனம்.

கேளுங்கள் சபையோர்களே பசுபதியை விடை விடாமல் மனத்தியானஞ்செய்து கொலு வீற்றிருக்கும் தேவேந்திர மகாராஜன்சபைக்கு மேனகை வருகிற விதங்காண்க.

## மேனகை வருவது கவி.

இந்திரர்அழைத்தசேதி இன்பமாய்காதில்கேட்டு
சந்திரவதனுள்ரம்பை தமக்கையுந்தானுமாக
அந்திரதேவமும்பெண்கள் அனைவரும்அருகில்சூழ
வந்திடும்சபையைநாடி மேனகைவருகின்றாளே.

## மேனகை தரு.

வந்தாளிதோமேனகை என்னுமாது
பந்துவராளிராகம் பாடிடுமேசாது
இந்திரன்சபையைநாடி ஏந்திழையாளும்வாராள்
கந்தங்களபம்வீச கனத்தவங்கியிலங்க
கட்டுங்கலைகளது மின்னகெத்திதனிலே
பொட்டுங்கதிரோன்போல துன்னமுகமதிலே
வட்டவிழிக்கிமையும் வனிதைபதிகம்பூசி
கானகமயிலைப்போலே நட்டுவரெல்லாம்பாட
மேனகையென்றபோது மீறுவார்மையல்தேவர்
மயிலைப்போலேநடிப்பேன் மயங்கிடுவார்தேவர்
மெய்ப்பாயரசன்முன்னே மேனகைமாதுவாராள்

## இந்திரன் வசனம்.

அடிமாதே மேனகா இன்னம் யென் செவிக்கு இன்பத்தைத் தரும்படி நிர்த்தனம்செய்வாயாக.

## மேனகை வசனம்.

இதோ நடனம்புரிகிறேன் நாதா.

## மேனகை தில்லானு.

தாகிர தகித்ர தாகித்ர தாகி தில்லிலர் நாதி ரதிர
நாதரதீம் நாதரதீம் தீம் தீம் தீம் தீம்
ஏலலி ஏலலி தளங்கு தகத திங்கணத்தோம்
தளங்குதக்ததிங்கண தோம்தளங்கு (தாகி)
தேவனேதேவனே இணைந்துசுகந்தந்திடுவீர்
மகிழ்ந்துசுகந் தந்திடுவீர்

தேவேந்திரன் வசனம்.

இன்னமொரு பதம்பாடுவாய் மேனகை.

மேனகை ஜாவளி.

சல்லாபசவுந்தரனே சமியேனடாமோடி.
வில்லைமன்மதன்வளைத்து விடுகிறேன்வாளிஅடா (சல்)
குங்குமகளபம்பூசும் அங்கமும்விம்முதே
செங்கனிஇதழ்சுவைக்க சித்தம்நாடுதேஅடா (சல்)
சந்திரமுகவதன சரசனேமாரசாமி
வந்துஇக்தவேளை மனசந்தோஷமாவாய் (சல்)
நல்லகுணந்தானமைந்த அன்பனேவாடசாமி
நல்சமையமிது நயந்துபாரடாஅடா (சல்)

தேவேந்திரன் வசனம்.

இன்னமொரு பதம்பாடுவாய் மேனகை.

மேனகை வசனம்.

அப்படியே தங்கள் மனம்களிக்க பாடுகிறேன் அரசே.

மேனகை ஜாவளி

ஆசையாகிவந்தேனிங்கு அரசேப்பாருமே
அன்பாய்வந்தாளென்னைக்கட்டியணையவாருமே
முத்தமிட்டுஅணைந்திடவே துறையேவாருமே
காமத்தாலேமோகமீறிகளைத்தேன்பாருமே
காமசரம்தைக்காமலேகாக்கவாருமே
வெறுத்துஎனைப்பார்க்காமலேவிதமாய்சேருமே
வேடிக்கைகொண்டேனே கோபம்போக்கிரேுமே.

இந்திரன் வசனம்.

ஆஹா அடி மேனகை மெத்த சந்தோஷம் இங்குவா அப்சரஸ் ஸ்ரீகளுடன் சேர்ந்தாப்போல் இருப்பாய் மேனகை;

கட்டியன் வசனம்.

கேளுங்கள்சபையோர்களே காலகண்டதிரிநேத்திராகியசதா தினமும்தியானஞ்செய்து கொலு வீற்றிருக்கும் தேவேந்திர மகாராஜன் சபைக்கு ஊர்வசிவருகிற விதங்காண்க,

ஊர்வசி கண்ணி.

இராஜதேவராஜவிசித்தி [illegible] ராஜரூபனே
ஆசையுடனூர்வசியுனை நாடிவந்தனே
கண்டதேவசுரர்மையற் [illegible]கொண்டுதேட
மண்டலத்திலுள்ளோரெல்லா [illegible]டவே
ஆதிசிவபூசைசெயு அரிஞர்தானுமே
சோதிதனைவிட்டேயெனைத் தொடரவேணுமே
மாரனொளிஎன்னைப்பார்க்கிற் தூரமோடுமே
நீரனெனைக்காணிலுடற் சோரவாடுமே

ஊர்வசி ஜாவளி.

மையல்வாளிதாக்கியே தயன்மனமும்வாடு திங்கனே
ஐயோதுரையேநீயென்னைநினைத்துஅலர லானனே
நிலவிலாதவானம்போலே னிற்கலானே னிங்கனே
கலையைவிட்டமான்போலே நீயுங்கதரலானே னிங்கனே
உன்னைச்சேரக்கொண்ட வெண்ணமுதவாச்சு தங்கனே
என்னைப்பிரிந்துநீ தனியாயிருக்கலானே யங்கனே
கையைத்தொட்டுமுத்தமிட் டன்புடன்கழித்தா யங்கனே
மெய்யுருகிஉனைநினைத்து வெயிலானே னிங்கனே

தேவேந்திரன் வசனம்.

இன்னமொரு பதம்பாடுவாய் பெண்ணே ஊர்வசி.

ஊர்வசி வசனம்.

அப்படியே தங்கள் மனம் களிக்க பாடுகிறேன் அரசே.

ஊர்வசி ஜாவளி.

மனமதுபொங்கி மயலதுவோங்கி
மாரனேஓட்ட மருவிடுமுன்னே
விதவிதஇன்பம் விளைந்ததேசாமி
வேண்டினேன் ஆவியை வி[illegible]வே

கட்டியன் வசனம்.

[illegible]களை ஸ்ரீஷபாருடராகியபரமசிவத்தை
இடைவிடாமல்மனத்தியானஞ்செய்து கொலுவீற்றிருக்கும் தேவே
ந்திர மகாராஜன் சபைக்கு திலோர்தமை வருகிற விதங்காண்க.

## திலோர்த்தமை தரு.

தேவேந்திரன்சபை திலோர்த்தமைமாதமே
தேடிவாராளடையவிங்கு தெரியப்போமே
இந்திராணிமுதல்யாரு மவளைக்கண்டுமே
ஏங்கமனம்வாங்கவெட்க மேந்திக்கொண்டுமே
மூவர்முதற்றேவர்களும் மோகம்கொள்ளவே
முகத்தின்காந்திமதியொளியை மொதுங்கத்தள்ளவே
பாவலர்களும் நாவலர்களும்
பக்ஷமுடனேதி அக்ஷதைதூவிட
பதியாய்விண்ணின் மதியாய்த்தேவர்
பார்க்கத்துயர்தீர்க்கமன மூர்க்கவொளிதாக்கவிதோ (தே)

## திலோர்த்தமை ஜாவளி.

சாமியுன்முகக்காந்தி சரசமதாய்நகைக்குதே
காதலாலேவாடவிதி கண்டேனெனக்காருமே (சாமி)
தனியாய்வேண்டுமாதை தடுப்பதுமே தர்மமோ
இனிவாயெனைப்பாராவிடில் ஏதேனினித்தாளனே (சாமி)
எந்தனைப்போல்பெண்களில்லை யிறைவனேகண்டதுண்டோ
என்னைதொட்டுபார்த்தாலிந்த குமரிச்சுகங்காணுமே (சாமி)

## தேவேந்திரன் வசனம்,

இன்னமொரு பதம்பாடுவாய் திலோர்த்தமை.

## திலோர்த்தமை ஜாவளி.

வாடாநீவாடாநீ வாடாநீவாடாநீ
மோடியேண்டா என்சாமி (வா)
கோபமோ கோபமோ
கொஞ்சியேமுந்தத்தந்து வஞ்சியேஎந்தனைநாடி (வா)
அன்பனே அன்பனே
[illegible] என்னைவருத்தலாமோ (வா)
காமனே காமனே
கன்னல்வில்லால்மாரன் என்னைவதைக்குறானே (வா)

## பொது வசனம்

இவ்விதமாக தேவேந்திரன் சபை முன்பாக ரம்பை மேனகை ஊர்வசி திலோசர் தமை முதலியவர்கள் நடனஞ் செய்துக் கொண்டிருக்கிறசமையத்தில் நாரதரும் கிருஷ்ண மூர்த்தியும் சபைமுன்பாக வருகிற விதங்காண்க.



### நாரதர் தரு

வாரும்வாரும்கிஷ்ணனே　　வஞ்சமில்லாஇஷ்டனே

### கிஷ்ணன் தரு

கூரும்சபைகள்கூட்டமே　　கோதைமார்கள்ஆட்டமே

### நாரதர் தரு.

ஆட்டம்பார்ப்போம்வாருமே　　அருகில்வந்துசேருமே

### கிருஷ்ணன் தரு.

நங்கைமார்கள்நடிக்கிறர்　　நன்ருய்கிதம்படிக்கிறர்

### நாரதர் தரு.

இங்கேவாரும்கீர்த்தியாய்　　இந்திரனைப்பார்த்திரா

## கிருஷ்ணன் தரு.

இஷ்டன்வந்துகின்றேனே இந்திரனைக்கண்டேனே

## நாரதர் தரு.

பாடும்ஓசைகேட்டியா நாடிவரும்பாட்டையாய்

## கிருஷ்ணன் தரு.

நாரதனேநாடினேன் நல்லசபையில்கூடினேன்



## தேவேந்திரன் வசனம்.

போற்றி போற்றி நாரதமகாமுனியே போற்றி.

## நாரதர் வசனம்.

வாழி வாழி தேவேந்திர மகாராஜனே வாழி.

## தேவேந்திரன் வசனம்.

இந்த திவ்ய ஆசனத்தின்பேரில் யெழுந்தருளும் சுவாமி.

## நாரதர் வசனம்.

சந்தோஷம் சந்தோஷம் தேவேந்திரனே.

## தேவேந்திரன் தரு.

பல்லவி.

கமான் கமான் கிருஷ்ணதேவா சிம்மாச
னியர் சிட்டவுன் சிட்டவுன். (கமான்)

அநுபல்லவி.

சும்மாசம் சயங்கொள்ளாதிர்
சாரதிபுரந்தாளிதா (கமான்)

சரணம்.

சின்னவாடு நேனு காநு சிந்த லீலைப்'புண்டோரு
கன்னதன்றி நீவு காதா தருணநாபை யுண்டு சாரதா (கமான்)

கோண்டி அம்ருத தினேகோ குருகுல தேவா போலோஜி
தியான்கர தேதின்கு தின்கு தரிசனேகோ தீன தேகோ (கமான்)

ஐடின் டாஸ்கு யெனி ஐ டியல் ஐ டிண்டு வான்சு யெனி மணி
அபாம் ஆங்கூஷ்ஸ் யூடு லேவ்மி ஐயர் எவன் பார்மை சேக் (கமான்)

எதுசொன்னாலும்உமக்கு இரக்கமில்லையாகையாலே
வாதுபுரியரத்தினத்தாலாகாதுண்மையாகசொன்னேன் (கமான்)

## தேவேந்திரன் வசனம்.

சரணஞ் சரணஞ் கிருஷ்ண மூர்த்தியே சரணம்.

## கிருஷ்ணமூர்த்தி வசனம்.

தேவேந்திரராஜனே வாழி வாழி

## தேவேந்திரன் வசனம்.

இந்த ஆசனத்தின்பேரில் வீற்றிருங்கள் கிஷ்ணமூர்த்தியே.

## கிருஷ்ணன் வசனம்.

அப்படியே வீற்றிருக்குறேன் தேவேந்திரனே.

## தேவேந்திரன் தரு.

அடியைப்போற்றினேன் முனிநாதாமுனிநாதா
அடியைப்போற்றினேன் படியேறியேவாரும்
முடியைதாழ்த்தினேன் முன்வந்தருளுவீர்

## நாரதர் தரு.

வாழிஇந்திராஎந்தநாளும் எந்தநாளும்
வாரும்இந்திராணியும்வந்து எந்தன்பாதத்தை
தாழ்ந்ததினாலேயான் சந்தோஷமானேனே

## தேவேந்திரன் வசனம்

கேளும் நாரதபகவானேமுன்னொருதரம் காற்றென்கிற வாயுபகவானுக்கும் ஆதிசேஷனுக்கும்யுத்தம் நடந்ததருணத்தில் உம்முடைய வீணையைமீட்டிப்பாடி அந்தஆதிசேஷனைமயங்கச்செய்த நாகவராளி இராகத்தைஇந்த நடனசபையில் மீட்டிப்பாட வேண்டும் முனிநாதனே

## நாரதர் கவி.

இப்படியுரைக்கஇந்திரன் இனியில்லாமகிழ்ச்சியாகி
செப்பிடும்வாழிதன்னை சேருடன்கரத்திலேந்தி
தப்பாமல்கரங்கள்வைத்து தம்பிரான்தனைநினைந்து
ஒப்பிடும்முனிவர்நாரதரும் ஓசையாய்மீட்டினாரே

## நாரதர் தரு.

மீட்டினார்பாரீர்யாழியில் தந்தியைபூட்டினார்தேரி
பாட்டிசைதவறாமல் பல்லவிபாடவே
கேட்டுஇந்திரன்முதல் கீர்த்திகொண்டாடவே
அட்டிகளில்லாமல் அனுபல்லவிசரணம் (மீட்டினார்)
நட்டுவரனைவரும்நடிக்க மேனகைவந்து
தும்புருமுதலான துறவிகள்எல்லோரும்
உம்பர்நாதங்கேட்டு உறக்கமெதங்கிட (மீட்டினார்)

## பொது வசனம்

இவ்விதமாக நாரதரானவர்வீணையை மீட்டிபாடினபிற்பாடுநாரதரானவர் ஸ்நானஞ்செய்து வருவதாக கானகம் சென்றபொழுது கிஷ்ணமூர்த்தியானவர் அந்த வீணையைமீட்டி நாரதர்பாடினதற்கு அநேகமாக சுரம்போட்டு பாடுகிறவிதங்காண்க

## கிருஷ்ணன் கவி.

சிவனையும்பாழில்வெல்ல சிந்தையில்நினைத்துவீணை
கவனமாய்எடுத்துமீட்டுங் கதையதைசெவியிலுற்றே
மவுனமாயுறங்கும்வேளை மாயனும்மீட்டியாழை
புவனமுமதிசயிக்க புதிப்பித்துப்பாடினாரே.

## கிருஷ்ணன் தரு

சொக்கநாதரேவந்திடுவீர் முக்கியமாயருள் தந்திடுவீர்
வேண்டினேனுனை பாண்டவனே
வேணதோற்றம் பூண்டவரே
ஆண்டியாய்பிச்சை யெடுப்பவரே
மாதர்கள்கற்பை கெடுத்தவரே
யானையுரித்துப் போர்த்தினவா
அடியேன்தன்னை காத்திடவா
நட்டுவரெல்லாம் ஓடினார்களங்கே
நங்கைமார்களெல்லாம் வாடினார்கள்
கிருஷ்ணன்பதங்கள் பாடினேனே
கீர்த்தியுள்ளதேவர் ஓடிவந்தாரே

## தேவேந்திரன் தரு.

தந்திரமாகப்பாடும் தனையனேஇங்குநீயும்
வந்ததைஎந்தனுக்கு வருத்துரைசெய்குவாயே

## கிருஷ்ணன் தரு.

எந்தவூரென்றுகேட்ட இந்திராஇதமாய்கேளும்
அந்தமாய்முனிவருக்கு அரிகிருஷ்ணன்நானேயாகும்

## கிருஷ்ணன் தரு ரூபகம.

இந்திரனேஇதமாய்கேளும் இந்தமுனிஎந்தனுக்கு
சுந்திரனேசொல்கிறேன்கேள் குருமுண்டுகுருவதாகும்

## தேவேந்திரன் தரு.

என்னவிதம்இப்பொழுது எந்தன்சபைமுன்னில்சொல்வாய்
பண்ணவேணும்நானறிய பாடும்விதம்இன்னதென்று

## கிருஷ்ணன் தரு.

சொல்லும்விதம்நீங்கள் தோகையரும்நீருமாக
சீக்கிரமாய்சென்றுகேட்டால் அம்முனிவர்தந்திடுவார்

## தேவேந்திரன் தரு.

இன்னதென்றுமொழிந்தாயானால் இந்திரன்நான்மாதரோடு
அன்னவரைக்கேட்டிடுவேன் அகனுமையா இன்னதென்று

## கிருஷ்ணன் வசனம்

கேளுமப்பா தேவேந்திரனே நான் நாரதருக்கு சிஷ்யனுக இருந்தபோது தன் தாடிமயிரில் ஒன்றெடுத்து தந்தியாக வைத்துப்பாடினார் ஆகையால் நான் அவரிடங்கற்றுக்கொண்டு அவரிடம் ஒருதாடி மயிரைவாங்கி வீணையில் அமைத்துப் பாடினேன் நீங்களெல்லாம் சென்று நாரதருடைய தாடிமயிரைக்கேட்டால் தந்திடுவார் வாங்கிக்கொள்ளும் தேவேந்திரனே.

## தேவேந்திரன் தரு.

ரோமந்தருவீரையனே முனிநாதனேரோமந்தருவீர்
தாமதம்செய்யாமல் தனையனும்யான்கேட்க
சீராய்தடைசொல்லாமல் சீக்கிரம்தருவீரே

## அரம்பை தரு.

சிகழிகொடுக்கவல்லவா அடியாளுக்கு
சிகழிகொடுக்க வல்லவா
செகமெல்லாம்கோடிதனில் திரிந்திடும்ஞானியே
அகமதுகளித்துடன் ரோமத்தைத்தருகுவீர்

## மேனகை தரு.

சடையைத்தாரும்முனியே தோகையர்க்குநீ
முடிவதுஇல்லாத மூவுலகந்திரியும்
அடியாளைமறவாமல் அன்புடன்தருவீரே

## நாரதர் கவி.

ஈசனேஎன்னமோசம் இந்தநற்சபையில்தானே
பாசமாயிந்திரனோடு பாவையர்கூடிவந்து
ஆசையாயிருக்குதென்று அவரவர்களித்துரோமம்
நாசமாய்பிடுங்கிக்கொண்டு நலியவேசெய்திட்டாரே.

## வசனம்.

அரகரா சிவசிவா கெங்காதரா சிவசம்போ ஈசனே என்ன செய்வேன் இது என்னமோசமோ இந்திரனோடு மாதர்களும் கூடி வந்துமிகுந்தகுதூகலத்துடன் என்தாடிமயிரையெல்லாம் ஒவ்வொன்றாய்ப்பிடுங்கிக்கொண்டு என்னைக்கஷ்டப்படுத்துகின்றார்களேஇதற்கென்செய்வேன் ஈசனே.

## தேவேந்திரன் கவி.

முனிவனேசொல்லக்கேளும் முழுநீர்சென்றபின்பு
கனிவுடன்கிருஷ்ணதேவர் கானத்தைக்கேட்டோம்நீரும்
தனிவுடன்ரோமந்தந்நீர் தந்தியாய்பாடவென்றே
வனிதையும்நாமுங்கூடி வாங்கவேவந்திட்டோமே.

## வசனம்.

கேளுமையா முனிநாதரே நீர்யாழ்மீட்டிப்பாடி சென்றபிறகு உம்முடைய சிஷ்யனை கிருஷ்ணமூர்த்தியானவர் நீர் பாடினதற்கு அநேகமடங்கு அதிகமாக மீட்டிப்பாடினார் அதைக்கேட்டநாங்கள் யாவரும் அவரிடம்சென்று விசாரிக்கையில் நீரும்உம்முடையதாடி மயிரை தந்தியாக்கிப் பாடினீர் என்றும் அதில் ஒன்று தனக்கும் கொடுத்ததாகவும் அதிலிருந்து உம்முடன் கற்றுக்கொண்டதாகவும் சொன்னார் ஆகையால் எனக்கு உம்முடையதாடிமயிரில் ஒன்று கொடுக்கவேண்டும் முனிநாதனே.

## நாரதர் தரு.

இந்திராஇது என்னமாயமா
கிருஷ்ணம்சொன் னதுஞாயமா

## அரம்பை தரு.

முனிவரேரோமங்கள் தாருமே
மொய்குழலைக் கண்ணால்பாருமே

## நாரதர் தரு.

போடி போடி எட்டநீலியே
புடுங்கவந்தாய் கிட்டநீலியே

## மேனகை தரு.

கிட்டவாரு மெங்கள்முனிவரே
அட்டியில்லாமல் முடிதருவீரே

## நாரதர் தரு.

கிருஷ்ணனே நாணங்களாச்சுதே
கிழவனென்மயி ரெல்லாம்போச்சுதே

## நாரதர் விருத்தம்.

அய்யனேஈதென்னமாயம் அவதியுள்ளாகினேன்உன்னால்
துய்யனேஉன்னைநான்கூட்டி துணைவந்தசுகமதுபோதும்
மெய்யனேஉனைத்துதித்தேன் மெல்லியர்இடரைத்தீர்த்து
பையவேஎனைரக்ஷிப்பாய் பாதங்கள்பணிந்தேன்நானே.

### வசனம்.

அகோகேளும் கிருஷ்ணபரமாத்மாவே உனைநான் வேடிக்கையாக்தேவலோகங்காட்ட துணைக்குஇட்டுவந்த சுகமானதுபோதும் தேவர்களாலும்தேவமாதாகிய ரம்பை மேனகை ஊர்வசிதிலோர்த்தமை முதலானவர்களாலும் துன்பப்படசெய்துவிட்டாய் ஆகையால் உனது பாதம்பணிந்தேன் இந்ததுன்பத்தை விலக்கி ரக்ஷிக்க வேண்டும் கிருஷ்ண பரமாத்மாவே.

## கிருஷ்ணன் கவி.

பஞ்சவர்துமியருக்கும் பதினெட்டுநாள்யுத்தத்தில்
வஞ்சகம்நடத்தப்போறேன் வரவொண்ணாதவ்விடத்தில்
மிஞ்சியேவல்லையென்று மேவுமிச்சபையரிய
சஞ்சலந்தீர்த்துவைப்பேன் சத்தியஞ்செய்தாயானால்.

### வசனம்.

கேளும்நாரதமுனியே இன்னும் கொஞ்சநாளில் பாண்டவராகிய ஐவருக்கும் கௌரவர்களாகிய திரியோதனாதி களுக்கும் பத்தும் எட்டும் பதினெட்டுநாள் யுத்தம் நடக்கப் போகிறது அதில் நான் முன்னின்று சிலவஞ்சகச் செயல்கள் செய்யப்போகின்றேன் அந்த யுத்த சமயம் பதினெட்டு நாளில் ஒருநாளாகிலும் நீர் வாரதில்லைஎன்றும் அப்படிவந்தாலும் யாதொருகலகமும் செய்யமாட்டேன் என்றும் எனக்குச் சத்தியஞ்செய்துகொடுத்தாயானால் உன்னுடைய இடரைதீர்த்துவைக்கிறேன் நாரதமுனியே.

## நாரதர் கவி.

வாரணியுமையாள்பாகன் வாரணன்முனிவர்சாக்ஷி
தாரணிபோற்றுங்கந்தன் தரணியோர்தேவர்சாக்ஷி
பாரதப்போரில்யானும் பதரியேவாரதில்லை
வாரதேஇல்லையென்று வணமொழிசாற்றினேனே.

### வசனம்.

அகோகேளும் கிருஷ்ண பகவானே ஆகாயவாணி பூமிதேவி சாக்ஷியாகவும் தேவர்களும் முனிவர்களும் சாக்ஷியாகவும் உமையவள் சங்கரன் விநாயகன் கந்தன சாக்ஷியாகவும் பாரதப்போரில் நான்வந்து தலையிடுவதில்லை சத்தியமாகச் சொல்கிறேன் கிருஷ்ண பகவானே.

## கிருஷ்ணன் கவி.

இந்திராஅப்சரஸ்திரீ இருடிகாள்சொல்வேன்கேட்பீர்
இந்தநாரதனையானும் ஏமாற்றுதற்காயிந்த
சுந்தரவீணை தன்னை சுதிமீட்டிபாடலானேன்
தந்திரமல்லாமலிந்த தலைதாடிமயிராகாது.

வசனம்.

அகோ கேளுமைய்யா தேவர்களே இந்திரனே இருடி தபோதனரே அப்சரசஸ்திரீகளே யான் இந்த நாரதரை ஏமாற்றுதற்காகவே இந்த வாத்தியக் கருவியாகிய வீணையை மீட்டினேன் நீங்களும் உண்மையென்றே நம்பி மோசம்போனீர்கள் இது தலை தாடி மயிரல்ல நன்றாய்க்கவனித்துப்பாரும் தேவர்களே.

தேவர்கள் கவி.

ஐய்யனே கிருஷ்ணபுத்தன் அழகானலீலையெல்லாம்
மெய்யனே யாங்கள்கண்டு மென்மேலுமானந்தித்தோம்
துய்யனே யாங்களெல்லாம் துரிதமாய்ச்சென்றுவாரோம்
ஐயனே விடையளிப்பீர் ஹரிபரந்தாமா போற்றி.

வசனம்.

கேளும் சுவாமி கிருஷ்ண பகவானே நாரதமுனிவரே நமது திருவிளை விளையாடல் யாங்கள்கண்டு மன மகிழ்ந்தோம் இனிநமது இருப்பிடத்திற்குச்செல்வோம் விடையளிப்பீர் சுவாமி.

கிருஷ்ண பகவான் கவி.

அமரர்களியோரே யெங்கள் ஆசீர்மஞ்சென்றுவாரோம்
தமதிருப்பிடத்திற்கேகி சந்தோஷமாயிருங்கள்
எமக்கினிமகிழ்ந்துநீங்கள் யெல்லோரும்விடையளித்தீர்
சமமாகநாமெல்லோரும் சதாகாலம்மகிழ்ந்திருப்போம.

வசனம்.

அகோகேளும்தேவர்களேநாங்களும்செலவுபெற்றுக்கொள்ளுகிறோம் நீங்கள் சதா ஆனந்தமாய் உமது வாசஸ் தானத்திற்குச் சென்று சுகமாயிருப்பீர்கள் வாரும் வாரும் நாரதமுனிவரே நாம நமது இருப்பிடம்போவோம்.

சகலரும் இந்திரன் சபை கலைந்து போகின்றார்கள்.

## தரு மங்களம்.

மங்களம் மங்களம் நித்யசுப
மங்களம் மங்களம்.

எங்கும் புகழ்ந்திடும எம்பெருமானுக்கும்
ஏழுலகளந்திடும் ஸ்ரீகிருஷ்ணதேவருக்கும் (மங்களம்)

இந்திரதி தேவருக்கும் ரம்பை திலோர்தமைக்கும்
இசைந்த ஊர்வசி மேனகைக்கும் (மங்களம்)

நாரதற்கும் இருடி. தபோதனர் கந்தன்
கணபதிக்கும் கௌரி பரமனுக்கும் (மங்களம்)

காருண்ய ஸ்ரீ அரி நாரணன் பிரமனுக்கும்
மங்களம் ஜெய மங்களம். (மங்களம்)

## வாழி விருத்தம்.

ஆதிவேதார்த்தத்தை யுணர்ந்தோர்வாழி
அவனியில்சூழ்கவிருஜர் சிறந்துவாழி
நீதியுடனிதையெழுதும் நிபுணர்வாழி
நீணிலத்தில் கோவிந்தசாமிவாழி
பூதலத்திலச்சிட்ட முருகேச முதலி வாழி
பூசுரர்களென்னாளும் சிறந்துவாழி
மாசில்லா இந்நூலை படிப்போர் கேட்போர்
மானிலத்திலென்னாளும் வாழி வாழி.

ஸ்ரீ கிருஷ்ணலீலை யென்னும்

# நாரதர் பங்க நாடகம்

முற்றுப் பெற்றது.